3975

3946

திருச்செந்தூர்த் தலபுராணம்

(1908)

சிவமயம்.

# திருநீடூர்த் தலபுராணம்.

இறையூர்

வடமலை நாரணக்குடை மன்னர்

இயற்றியது.

பென்ஷன் டிஸ்டிரிக்டு முனிசீபு

வ. த. சுப்பிரமணிய பிள்ளை

அவர்கள்

சென்னபட்டணம்

வேப்பேரி

ராம நிலய விவேகாநந்த அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தது.

---

March, 1908.

*Copyright reserved.*

உ

சிவமயம்.

# பதிப்புரை.

இப்புராணக் கையெழுத்துப் பிரதி யொன்றை சென்னையி லிருக்கும் ஹைகோர்ட்டு வக்கீல் குமஸ்தாவும் **திருநீடூர் - பிரமஸ்ரீ வேம்பு ஐயர்** அவர்கள் குமாரருமாகிய **ம-௱-௱-ஸ்ரீ- கிருஷ்ண ஐயர்** என்பவர் சற்றேறக்குறைய ஒரு வருடத்துக்கு முன்னே என்னிடம் கொடுத்தார். அதை அச்சிட உத்தேசித்து வேறு பிரதி யொன்று எழுதி அஷ்டாவதானம் பூவை - கலியாண சுந்தர முதலியார் அவர்களிடம் அனுப்பிப் பார்வையிட்டுக் கொடுக்கும்படிக் கேட்டேன். அவர்கள் ஒருவாறு பார்த்து அச்சிடலாம் என்று திருப்பியனுப்பினார்கள். என் குமாரன் சிரஞ்சீவி செங்கல்வராயன் ஸ்தலயாத்திரையாக திரிசிராபுரம் முதலிய இடங்களுக்குச் சென்றபோது நீடூருக்கும் போயிருந்தான். அங்கே **ம-௱-௱-ஸ்ரீ- பரதேசியாபிள்ளை** என்பவர் ஏட்டுப் பிரதியொன்று அவனிடம் கொடுத்தார். இவ்விரண்டு பிரதிகளையும் வைத்துக்கொண்டு அச்சிடத் துணிந்தேன். இப்புத்தகத்தில் என்ன பிழை யிருந்தபோதிலும் கற்றறிந்த பெரியோர் பொறுத்தருளி, அதிற் கூறியிருக்கும் உத்தம சரித்திரங்களையே மேலாகக் கொள்வார்க ளென்று நம்பி யிருக்கின்றேன். பிரதிகள் கொடுத்து உதவினோர் முதலிய எல்லோருக்கும் என் மனப்பூர்வமான வந்தனம் அளிக்கின்றேன்.

பிலவங்கஞூ,
பங்குனிமீ.
March, 1908.

**வ. த. சுப்பிரமணிய பிள்ளை.**

# பொருள் அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| | முகவுரை | 1—2 |
| | நூலாசிரியர் வரலாறு | 3 |
| | ஸ்தலத்துத் தேவாரப் பதிகங்கள் | 4—8 |
| | கடவுள் வாழ்த்தும் பாயிரமும் (15-செய்யுள்) | 9—12 |
| 1. | தலமான்மியச் சருக்கம் (32–செய்) | 13—18 |
| 2. | கயிலைச் சிறப்புச் சருக்கம் (20-செய்) | 19—22 |
| 3. | கணநாதர்ச் சருக்கம் (20-செய்) | 22—25 |
| 4. | இந்திரன் பூசைச் சருக்கம் (30-செய்) | 25—30 |
| 5. | கானநிர்த்தனச் சருக்கம் (29-செய்) | 30—35 |
| 6 | ஆதித்தன் பூசைச் சருக்கம் (36-செய்) | 35—41 |
| 7. | வில்வச் சருக்கம் (29-செய்) | 41—46 |
| 8. | சூரியன் பேறுபெற்ற சருக்கம் (20-செய்) | 46—50 |
| 9. | சந்திரன் பூசைச் சருக்கம் (29-செய்) | 50—55 |
| 10. | அலவன் பூசைச் சருக்கம் (51-செய்) | 55—65 |
| 11. | ஆலால சுந்தரி பூசைச் சருக்கம் (20–செய்) | 65—68 |
| 12. | செம்பியன் பூசைச் சருக்கம் (30-செய்) | 69—73 |
| 13. | திருப்புன்கூர்ச் சருக்கம் (20–செய்) | 74—77 |
| 14. | தீர்த்தச் சருக்கம் (19-செய்) | 77—80 |
| | ஆகத் திருவிருத்தம் – ௪00. | |
| | முனையடுவார் நாயனார் புராணம். | 81—82 |

சிவமயம்.

# முகவுரை.

நீடூர் என்பது சோழவளநாட்டிற், காவிரிமாநதியின் வடக்கேயுள்ள பாடல்பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று. இது மாயூரத்துக்கு வடமேற்கு மூன்று மைல் தூரத்திலும் ஆநந்த தாண்டவபுரம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு ஒரு மைல் தூரத்திலும் இருக்கிறது. மாயூரத்திலிருந்து போகவேண்டுமானால் திரு அழுந்தூர் என்னும் ஊர் வழியே போகவேண்டும்.

ஊழிக்காலத்தினும் உலவாது நீடித்திருக்கும் தலமாதலின் இதற்கு நீடூர் என்னும் திருநாமம் எய்தியது. இதனைப் * "பிரளயகா லம்வரினுஞ் சிதையா தாலே, ஒப்பரிய நீடூர் என் றொருதிருப்பே ரெப்பொழுது முரைப்பர் மாதோ" எனப் புராணத்தில் வருவதாலும் அறியலாகும்.

தேவாரம், பெரியபுராணம் ஆதிய நூல்கள் பாடப்பெற்ற காலத்தும் இத்தலம் நிலவளம் நீர்வளம் நிறைந்து விளங்கினதால் 'நெல்லால் விளைகழனி நீடூரானை' என்றும், 'நிறைபுனற் கழனிச் செல்வ நீடூர்' என்றும், 'செல்வ நீடூர்', 'திருநீடூர்' என்றும், தேவாரத்திலும், பெரியபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

நீடூர்ப்பெருமானது பெருமை சுந்தரமூர்த்தி சுவாமிகள் "கற்ற கல்வியிலும் இனியானை" என்றும், "கோடி தேவர்கள் கும்பிடு நீடூர்க் கூத்தனைப் பணியா விடலாமே" என்றும் அருமையாக உரைத்ததின் மூலமாய்த் தெள்ளிதில் விளங்கும்.

---

* தலமான்மியச் சருக்கம் ௨௰ ஆவது செய்யுளைப்பார்க்க.

ஸ்தலவிநாயகர் பெயர்: ... பாலகணேசர்.

ஸ்வாமி திருநாமங்கள்: ... { சோமநாதர்.<br>கானநிர்த்த சங்கரர்.<br>* (பாடியாடியதேவர்.) }

அம்பிகை திருநாமங்கள்:... { † வேயுறு தோளியம்மை<br>‡ அதிகாந்தியம்மை.<br>வேதநாயகி. }

தீர்த்தங்கள் ஒன்பது: ... ... ஆநந்த தீர்த்தம், செங்கழு நீரோடை, சூரியதீர்த்தம், சந்திர தீர்த்தம், இந்திர தீர்த்தம், பத்திரகாளி தீர்த்தம், முநிவரர் தீர்த்தம், பருதிகுண்டம், வருண தீர்த்தம்.

ஸ்தலவிருக்ஷம்: மகிழ மரம்.

வழிபட்டுப் பேறு பெற்றோர்: இந்திரன், சூரியன், சந்திரன், நண்டு, காளி.

இந்தத் தலம் வகுளாரணியம் என்றும், மகிழாரணியம் என்றும், மகிழவனம் என்றும் வழங்கும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய முனை யடுவார் நாயனார் என்பவர் திருநீரில் அவதரித்தவரானதா லும் அவரைப்பற்றி இப்புராணத்தில் ஒன்றுஞ் சொல்லப் படாமையாலும், அவர் புராணத்தைப் பெரியபுராணத்திலிருந் தெடுத்தெழுதி, இப்புராணத்தின் இறுதியிற் சேர்க்கப்பட் டிருக்கிறது.

* "பாடியாடும் பரிசே புரிந்தானை" சுந்தரர்-தேவாரம் கூ-ஆவது செய்யுள்.

† சுந்தரர் தேவாரம் அ-ஆவது செய்யுளைப்பார்க்க.

‡ 'நீக்காத பேரொளி' அப்பர் தேவாரம் ரு-ஆவது செய்யுள்.

# நூலாசிரியர் வரலாறு.

இப்புராணம் இயற்றியவர் இறையூர் வடமலை நாரணக்குடை என்பவர். இவரை வடமலைப்பிள்ளையன் என்றும், வடமலையப்ப பிள்ளை என்றும் சொல்லுவர். இவர் சற்றேறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன், திருவரங்கத்துக் கருகாமையிலுள்ள ஒரு சிறு கிராமத்தில், சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். கல்விகற்று வல்லவராய்ச் சேனாபதி என்னும் உத்தியோகம் பெற்றுப், பின்பு ராஜப்பிரதிநிதியாகித் திருநெல்வேலியிலிருந்து அரசு புரிந்து வந்தார். இவர்க்கு மேலாயிருக்கும் அரசன் இவர் திறத்தைக் கண்டு மகிழ்ந்து, இவருக்கு ஐயன் என்னும் பட்டத்தை அளித்தான். அதுமுதல் இவருக்கு வடமலையப்ப பிள்ளையன் என்னும் பெயர் வழங்கிற்று. மச்சபுராணம் இவர் செய்த வேறு நூல். இவருடைய ஞானாசாரியர் சோழநாட்டிலுள்ள துகிலி கஞ்சனூர் என்னும் பதியில் வீற்றிருந்த சுவாமிநாத தேசிகர் என்று இப்புராணங் கூறுகிறது. ஆனால் மச்சபுராணத்தில் குருவணக்கத்தில், இவ்வாசிரியர் பெயர் சுப்பிரமணிய தேசிகர் என்று கண்டிருக்கிறது. இவ் வித்தியாசத்துக்குக் காரணம் புலப்படவில்லை.

இந்நூல் மிக எளிய நடையில் வெகு நன்றாகப் பாடப்பட்டிருக்கிறது. சில இடங்களிற் சித்திரக் கவிகளும் அமைந்திருக்கின்றன. அவைகளால் ஆசிரியருடைய சாமர்த்தியம் நன்கு விளங்குகின்றது.

இவர் வரலாற்றின் விரிவை மச்சபுராணத்திற் கண்டு கொள்க.

சிவமயம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

# தேவாரப்பதிகம்

## திருப்புன்கூர் - திருநீடூர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பிறவாதே தோன்றிய பெம்மான் றன்னைப் பேணாதா ரவர்தம்மைப் பேணா தானைத், துறவாதே கட்டறுத்த சோதியானைத் தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் றன்னைத், திறமாய வெத்திசையுந் தானே யாகித் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, நிறமா மொளியானை நீடூரானை நீதனே னென்னேநா னினையா வாறே. (௧)

பின்றானு முன்றானு மானான் றன்னைப் பித்தர்க்குப் பித்தனாய் நின்றான் றன்னை, நன்றாங் கறிந்தவர்க்குந் தானே யாகி நல்வினையுந் தீவினையு மானான் றன்னைச், சென்றோங்கி விண்ணளவுந் தீயா னானைத் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, நின்றாய நீடூர் நிலாவி னானை நீதனே னென்னேநா னினையா வாறே. (௨)

இல்லானை யெவ்விடத்து முள்ளான் றன்னை யினிய நினையாதார்க் கின்னா தானை, வல்லானை வல்லடைந்தார்க் கருளும் வண்ண மாட்டாதார்க் கெத்திறத்து மாட்டா தானைச், செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைத் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, நெல்லால் விளைகழனி நீடூரானை நீதனே னென்னேநா னினையா வாறே. (௩)

கலைஞானங் கல்லாமே கற்பித் தானைக் கடுநரகஞ் சாரா
மே காப்பான் றன்னைப், பலவாய வேடங்க டானே யாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானைச், சிலையாற் புரமெரித்த
தீயாடியைத் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, நிலையார்
மணிமாட நீடூரானை நீதனேனென்னேநா னினையா வாறே. ()

நோக்காதே யெவ்வளவு நோக்கி னானை நுணுகாதே யா
தொன்று நுணுகி னானை, யாக்காதே யாதொன்று மாக்கி னானை
யணுகாதா ரவர்தம்மை யணுகா தானைத், தேக்காதே தெண்
கடனஞ் சுண்டான் றன்னைத் திருப்புன்கூர் மேவிய சிவலோ
கனை, நீக்காத பேரொளிசேர் நீடூரானை நீதனேனென்னே
நா னினையா வாறே. (௫)

பூணலாப் பூணானைப் பூசாச் சாந்த முடையானை முடை
நாறு புன்கலத்தி, லூணலா வூணானை யொருவர் காணா வுத்த
மனை யொளிதிகழு மேனியானைச், சேணுலாஞ் செழும்பவ
ளக் குன்றொப் பானைத் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை,
நீணுலா மலர்க்கழனி நீடூரானை நீதனேனென்னேநா னினை
யா வாறே. (௬)

உரையார் பொருளுக் குலப்பிலானை யொழியாமே யெவ்
வுயிரு மானான் றன்னைப், புரையாய்க் கனமாயாழ்ந் தாழா
தானைப் புதியனவு மாய்மிகவும் பழையான் றன்னைத், திரை
யார் புனல்சேர் மகுடத் தானைத் திருப்புன்கூர் மேவிய சிவ
லோகனை, நிரையார் மணிமாட நீடூரானை நீதனேனென்னேநா
னினையா வாறே. (௭)

கூராவத் தணையானுங் குளிர்தண் பொய்கை மலரா
னுங் கூடிச்சென் றறிய மாட்டா, ராரொருவ ரவர்தன்மை

சீரரவக் கழலானை நிழலார் சோலைத் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, நீரரவத் தண்கழனி நீடூரானை நீதனை னென்னேனா னினையா வாறே. (௮)

கையெலா நெய்பாயக் கழுத்தே கிட்டக் கால்நிமிர்த்து நின்றுண்ணுங் கையர் சொன்ன, பொய்யெலா மெய்யென்று கருதிப் புக்குப் புள்ளுவரா லகப்படா துய்யப் போந்தேன், செய்யெலாஞ் செழுங்கமலப் பழன வேலித் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, நெய்தல்வாழ் புனற்படப்பை நீடூரானை நீதனை னென்னேனா னினையா வாறே. (௯)

இகழுமா றெங்ஙனே யேழை நெஞ்சே யிகழாது பரந்தொன் றாய் நின்றான் றன்னை, நகழுமா வரைக்கீழிட் டரக்கர் கோனை நலனழித்து நன்கருளிச் செய்தான் றன்னைத், திகழுமா மதகரியி னுரிபோர்த் தானைத் திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, திகழுமா வல்லானை நீடூரானை நீதனை னென்னேனா னினையா வாறே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஊர்வ தோர்விடை யொன்றுடை யானை யொண்ணு தற்றனிக் கண்ணுத லானைக், கார தார்கறை மாமிடற் றானைக் கருத லார்புர மூன்றெரித் தானை, நீரில் வாளைவ ரால்குதி கொள்ளு நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர், பாரு ளார்பர வித்தொழ நின்ற பரம னைப்பணி யாவிட லாமே. (௧)

துன்னு வார்சடைத் தூமதி யானைத் துயக்க றுவகை தோ ன்றுவிப் பானைப், பன்னு நான்மறை பாடவல் லானைப் பார்த்த னுக்கருள் செய்த பிரானை, என்னை யின்னரு ளெய்துவிப் பா னை யேதி லார்தமக் கேதிலன் றன்னைப், புன்னை மாதவி போ தலர் நீடூர்ப் புனித னைப்பணி யாவிட லாமே. (௨)

கோலு மூவிலை வேலுடை யானைக் கொடிய காலனை யுங்குமைத் தானை, நல்ல வாநெறி காட்டுவிப் பானை நாலு நா முகக் கின்றபி ரானை, அல்ல லில்லரு ளேபுரி வானை யாடுநீர் வயல் சூழ்புனல் நீடூர்க், கொல்லை வெள்ளெரு தேறவல் லா னைக் கூறி நாம்பணி யாவிட லாமே. (௩)

தோடு காதிடு தூநெறி யானைத் தோற்ற முந்துறப் பாய வன் றன்னைப், பாடு மாமறை பாடவல் லானைப் பைம்பொழிற் குயில் கூவிட மாடே, ஆடு மாமயி லன்னமோ டாட அலை புனற்கழ னித்திரு நீடூர், வேட னாயபி ரானவன் றன்னை விரும்பி நாம்பணி யாவிட லாமே. (௪)

குற்ற மொன்றடி யாரில ராகிற் கூடு மாறது னைக்கொடுப் பானைக், கற்ற கல்வியி லும்மினி யானைக் காணப் பேணு மவர்க் கெளி யானை, முற்ற மைந்தந்து தந்திருப் பானை மூவ ரின் முதலாயவன் றன்னைச், சுற்று நீர்வயல் சூழ்திரு நீடூர்த் தோன்ற லைப்பணி யாவிட லாமே. (௫)

காடி லாடிய கண்ணுத லானைக் காலனைக் கடிந் திட்ட பிரா னைப், பாடி யாடும் பரிசே புரிந்தானைப் பற்றி னோடுசுற் றம் மொழிப் பானைத், தேடி மாலயன் காணரி யானைச் சித்த முந் தெளி வார்க்கெளி யானைக், கோடி தேவர்கள் கும்பிடு நீடூர்க் கூத்தனைப்பணி யாவிட லாமே. (௬)

விட்டி லங்கெரி யார்கையி னானை வீடி லாதவி யன்புக ழானைக், கட்டு வாங்கந் தரித்தபி ரானைக் காதி லார்கன கக்

குழை யானை, விட்டி லங்குபுரி நூ லுடை யானை வந்த வார்
தலை யோடுடை யானைக், கட்டி யின்கரும் போங்கிய நீடூர்க்
கண்டு நாம் பணி யாவிட லாமே. (௭)

மாய மாயம னங்கெடுப் பானை மனத்து ளேமதி யாயிருப்
பானைக், காய மாயமு மாக்குவிப் பானைக் காற்று மாய்க்கன
லாய்க்கழிப் பானை, ஓயு மாறுறு நோய்புணர்ப் பானை யொல்லை
வல்வினை கள்கெடுப் பானை, வேய்கொள் தோளுமை பாகனை
நீடூர் வேந்தனைப்பணி யாவிட லாமே. (௮)

கண்ட முங்க றுத் திட்டபி ரானைக் காணாப் பேறுமவர்க்
கெளி யானைத், கொண்ட ரைப்பொரி தும்முகப் பானைத் துன்
ப முந்துறந் தின்பினி யானைப், பண்டை வல்வினை கள்கெடுப்
பானைப் பாக மாமதி யானவன் றன்னைக், கெண்டை வாளை
கிளர்புனல் நீடூர்க் கேண்மை யாற்பணி யாவிட லாமே. (௯)

அல்ல லுள்ளன தீர்த்திடு வானை யடைந்த வர்க்கமு தாயிடு
வானைக், கொல்லை வல்லர வம்பசைத் தானைக் கோல மார்கரி
யின்னுரி யானை, நல்ல வர்க்கணி யானவன் றன்னை நாளுங் கா
தல்செய் கின்றபி ரானை, மெல்லி மல்லிகை யேகமழ் நீடூ ரே
த்தி நாம்பணி யாவிட லாமே. (௰)

பேரோ ராயிர மும்முடை யானைப் பேசி றற்பெரி தும்
மினி யானை, நீரூர் வார்சடை நின்மலன் றன்னை நீடூர் நின்று
கந் திட்டபி ரானை, ஆரூ ரன்னடி காண்பதற் கன்பா யாதரித்
தழைத் திட்டவிம் மாலை, பாரூ ரும்பர வித்தொழ வல்லார்
பத்த ராய்முக்தி தாம்பெறு வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

சி வ ம ய ம்.

# நீடூர்த் தலபுராணம்.

---

## கா ப் பு.

சீர்பூத்த தடந்திரைக்கா விரிநாட்டு வடகரையிற் சிறந்து மேலை, பார்பூத்த மகிழ்வனமாம் நீடூரிற் றிகழுறை பாடியாடுந், தார்பூத்த சடைமுடியார் தலம்பூத்த மகிமைதனைத் தமிழாற் பாடக், கார்பூத்த வொருகோட்டு மும்மதநால் வாய்க்களிறு காப்ப தாமே.

## கானநிர்த்த சங்கரர்.

பூமேவு திருமருவி நிலமகளுக் கணிகலமாய்ப் புனித நீடூர்க், தேமேவு மகிழ்வனத்திற் றிருமாலு நான்முகனுஞ் சிறந்து போற்றக், காமேவு புரந்தரனு நிரந்தரமும் பூசை செயுங் கருத்தைநோர்ந்து, பாமேவு சதிமுறையிற் பாடி யா டியதேவைப் பணிதல் செய்வாம். (க)

## வேயுறுதோளி யம்மை.

அலகிலா விளையாடல் புரிந்தருளு மகிழ்வனத் தமலர் கங்கை, யிலகுவார் சடைமவுலிப் பெருமானு ரிடத்தில்வள ரிமய மங்கை, திலகவா ளுதற்கருங்கட் செங்கனிவாய் வெண் மூரற் செல்வி யீரேழ், உலகெலா மீன்றருள்வே யுறுதோளி பாதமல ருளத்துள் வைப்பாம். (உ)

## விநாயகர்.

தினகரற்கு வரமுதவு தேவியதி காந்திபுணர் செல்வர் நீடூர், அனகர்மகிழ் வனநாதர் தலமகிமை தனைச்சிறியே னன்பிற் கூறப், பனகபதி கொண்டாடப் பாரதத்தின் பெருங்

கதையைப் பண்டோர் கோட்டாற், கனகவரை தனில்வரை யுங் கரடமதக் களிற்றினடி கருத்துள் வைப்பாம். (௩)

## முருகர்.

ஞான வித்தகர் நான்மறை யும்புகழ் நீடூர்க்
கான நிர்த்தன சங்கரர் தங்கழை கழற
வான வர்க்கிடர் நீரவை வேற்படை யேவித்
தான வர்ப்பொரு சண்முக னைப்பர வுதுமே. (௪)

## நந்தி தேவர்.

நிலாவொளி பழுத்தமா னெடிய வெற்றின்மேல்
உலாவுவார் மகிழ்வுறத் துறையு நாயகர்
கலாமதி வேணியர் கணங்கட் கீசராஞ்
சிலாதர்தஞ் சுதர்பதஞ் சென்னி சேர்த்துவாம். (௫)

## ஆலால சுந்தரி.

காலாலம் மறலிதனை வீட்டியகண் ணுதற்பரமர் கடுக்கை மாலைக், கீலால வேணியர்வெண் ணீறணிந்த செம்பவளக் கேழ்மா மேருப், போலால நிழலில்வரு சோமநா யகருறையும் புனித நீடூர், ஆலால சுந்தரியா மந்தரிசெந் திருப்பாத மகத் துள் வைப்பாம். (௬)

## சரஸ்வதி.

பாணி யிற்கொள் படிக வடத்தின
னாணி முத்தி னழகிய மேனியள்
சேணி ருக்குமத் தேவரெ லாம்புகழ்
வாணி பொற்பத மாமலர் போற்றுவாம். (௭)

## திருஞான சம்பந்தர்.

முழுமலத்துக் குறையுளெனுஞ் சமண்மூட மதங்களெ லா முறித்து விண்ணோர், தொழுமலத்த கத்திருத்தாட் கயற்

கணுமை பங்கர்பதந் துணிவிற் போற்று, முழுமலத்தின் வழி வுணேயூர்ந் தமிழ்தரள நிலவெறிக்கு மொலிநீர்ப் பண்ணைக், கழுமலத்து மெய்ஞ்ஞானக் கவுணியர்கோன் கமலபதங் கருத்துள் வைப்பாம். (அ)

## சுந்தரர், திருநாவுக்கரசர், திருவாதவூரர், அறுபத்துமூவர்.

வேதனு ரணன்தேடிக் காணரிய பரஞ்சோதி விடைமே லெந்தை, பாததா மரைநோவ இரவிலோர் தூதுசெல்லப் பணித்தோன் றன்னைப், போதமே திருவுருவாந் திருநாவுக் கரசையன்பு பூத்த சிந்தை, வாதவூ ரனைப்போற்றி யறுபத்து மூவர்பதம் வணக்கஞ்செய்வாம். (க)

## தண்டீசர்.

பந்தபா சங்களற நல்வினையின் பகுதிவந்த பரம ஞானச், சிந்தையார் முழுதுணர்ந்த தெய்வநான் மறையவர்க்கோர் திலகம் போல்வார், எந்தையார் பிறைமுடிக்குப் பாலாட்டு மளவை யில்வந் திடறு செய்யுந், தந்தையார் தாளெறிந்த தண்டீசர் புண்டரிகச் சரணம் போற்றி. (க0)

## சுவாமிநாத தேசிகர்.

மாமேவு சோணாட்டிற் சிறப்பா யோங்கி வளர் தூகிலி கஞ்சனூர் மருவி வாழும், பாமேவு திருமறையோர் குலத்துட் டோன்றிப் பாசவினை யகலஅருட் பார்வை பார்த்து, நாமேவு மந்திரத்தை யுபதேசித்து ஞானபோ தனைபுரிந்தென் னுளுங் கஞ்சத், தேமேவு பெரும்புகழ்ச்சு வாமிநாத தேசிகன்பங் கேருகத்தாள் சிந்தை செய்வாம். (கக)

## அவையடக்கம்.

அண்டர்நா யகன்மகிழ் வனத்த ருங்கதை
பண்டுதேர் வடசொல்யான் தமிழிற் பன்னுதல்

தெண்டிரை முழக்கருந் தேனின் வாரியோர்
வண்டிணை நகைபுறு மாறு போன்றதே. (கஉ)

---

## ஆக்கியோன் பெயர்.

கங்கைசூ டியசடிலர் அதிகாந்தி யிடப்பாகர் கான நிர்த்த,
சங்கரனார் மகிழ்நீடூர்த் தலபுரா ணத்தைமுது தமிழாற் செய்
தான், பங்கயா சனக்கொலுவில் வீற்றிருக்கும் பணைமுலைச்
செம் பவளச் செவ்வாய், மங்கைமே விய இறையூர் வடமலை
நா ரணக்குடையா மன்ன ரேறே.

---

## பாயிரம்.

சைவபுரா ணக்கோடி யுருத்திரசங் கிதையதனிற் றனி
முன் னோது, மெய்வளரா றத்தியா யத்துரைத்த வைவனத்
துள் விமலன் வாழ, மைவதியு மகிழ்வனநீ டூர்த்தலமான் மிய
மும்வெள்ளி மலையின் சீரும், தெய்வவடி வாகியிரு பறவை
க ணாதராய்ச் சேர்ந்த வாறும். (கங)

இந்திரன்பூ சையுங்கான நிர்த்தனமு மினன்பூசை யியற்
று மாறும், முந்தியவில் வச்சிறப்பு மிரவிக்கு வரங்கொடுத்த
முறையுந் தாய, சந்திரன்பூ சையுமலவன் பூசையுமா காளி
யின்பூ சனையுஞ் சோழன், வந்தனையுந் திருப்புன்கூர் வளமும்
நவ தீர்த்தத்தின் மகிமை தானும். (கச)

திருக்கிளரும் வடநூலாற் சூதர்முனி வர்க்குணர்ந்து
செப்புங் காதை, சருக்கமொரு பதினொன்காய்த் தனிவிருத்தம்
நானூறாய்த் தமிழா லோங்கு, மருக்கமழு மிதழியந்தார் மகிழ
வனத்தெந்தைபத மலரைப்போற்றிப், பொருட்கனியும் புகழ்
நீடூர்ப் புராணமுறை பிறழாமற் புகல்வன் மன்னே. (கரு)

---

# முதலாவது தலமான்மியச் சருக்கம்.

பூதலத்து மானிடரும் பொன்னாட்டு வானவரும் புகழ் பெற்றோங்கும், பாதலத்து மணிச்சுடிகை நாகருமின் றநுதினமும் பணிந்து போற்றுங், காதலர்பைந் துணர்விரியு மகிழ்வனத்து முளைத்தெழுந்த தலைவர் நீரே, மாதலத்து மகிமையையான் வரமுறையி னறிந்தவண்ணம் வகுப்பன் மாதோ. (௧)

நந்தாமிழ்வண் டரளநிலாக் கொப்புளிக்குங் கோமதிநன் னதிதீரத்திற், செந்திருவுங் கலைமகளு மிமயமலை யின்றெடுத்த செல்வமாதுஞ், சந்ததமு முவந்திருப்பத் தருவிரா மன்னு குத்த தடம்பூங் காவில், இந்திரகற் பகம்போல நிறைந்திருக்கும் வன்னிமரத் திடத்தி னீழல். (௨)

வந்துசவு னகர்வசிட்டர் புலத்தியர்நங் குடமுனிவர் மரீசி யத்ரி, சிந்தைதெளி தருபிருகு கண்ணுவர்கோ தமர்சனகர் திகழ்வான் மீகர், முந்துபரா சரர்புலக ருரோமசர்கா சிபர்முதலா முனிவ ரெல்லாந், தந்தமனை வியர்களுடன் தரும்யாக சாலைமிகச் சமைத்துச் சார்ந்தார். (௩)

அம்முனிவர் பெருவேள்வி யனைத்துமுடித் தவைகையுட னமர்ந்த பின்னர், செம்மைதிகழ் சூதரையோ ராசனத்தி லினிதிருத்தித் தெளிந்த ஞானத், தம்மனத்தி னன்பினுட னருக்கிய பாத்தியங்கொடுத்துத் தவத்தான்மிக்கீர், எம்மிதய மகிழ்ந்திடவே சகலபுரா ணங்களுமுன் னியம்பி னீரால். (௪)

கரைகாண்டற் கரிதாய மறைவகுத்த மாமுனிவன் கருதி யோது, முறையாக வுமக்குரைத்த அறுமூன்று புராணத்து ளுயர்சைவத்தில், வரையாது சொலுங்கோடி யுருத்திரசங் கிதையின் மகிழ் வனத்து நீரே, தரைமீதி லதிகமென வியம்பினீர் விரித்துமின்னஞ் சாற்று மென்றார். (௫)

என்றமுனி வரைநோக்கிச் சூதர்சடை முடிதுளக்கி யினிது கேண்மின், நன்றிதரு மத்தலத்தின் சரிதையொரு

காற்கேட்பி னுவாற் சொல்லின், வென்றிதரு மகிமையவா
மணிமாதி செல்வமெட்டு மிகவே நல்கு, மொன்றவுயிர் சிவ
லோக சாதனமுக் கியமுதவு முண்மை தானே. (௬)

விருப்பமுறு காமியர்க்குக் காமமுமெய்ப் புண்ணியத்தை
வேண்டி னோர்க்குக், கருத்திசைந்த புண்ணியமுங் கதியினை
வேட் டோர்க்குநல்ல கதியு முற்று, முருப்பொலிந்த நித்தியத்
தை விரும்பினர்க்கு நித்தியமு முதவு மேருப், பொருப்புவில்
லான் குடியிருக்கு மகிழவனப் பெருமையெவர் புகழவல்லார்.

உறந்தையர்கோன் புரந்தருளத் திங்கடொறு மும்மாரி
யோங்க வெண்ணான், கறந்தழைபு முத்தமிழ்தேர் வளநாட்
டில் யாவருக்கு மன்பு கூர்ந்து, நிறந்திகழும் வெண்டரளந் தி
ரைக்கரத்தால் முகந்தெறிபு நெடுநீர் மோதிச், சிறந்தருள்கா
விரிவடபா லிவனமுண் டவைதெரிந்து செப்புங் காலே. (௮)

முந்துவன மெடுத்துரைக்கிற் கரடமத முடைத்தெறிந்த
முழுநீர் தேக்கிச், சிந்துபுழைத் தனித்தடக்கை யிருபிறைக்
கோட் டொருநால்வாய்ச் செங்கணுடைக், கந்துசுளித் தெடு
த்தெறிபு மால்யானை பூசைசெய்து கதிபெற் றோங்குந், தந்தி
வன மாமதன்பேர் தெரிசித்தோர் பரிசுத்தத் தன்மையாவார்.

ஆலமணி மணிமிடற்று ரழகுபழுத் தொழுகுமலை யரச
னீன்ற, வாலமதி நுதற்கௌரி யொருபாகர் தழற்சோதி வடி
வார் சீறுங், காலன்விழ முனமுதைத்த கடவுளரெப் போது
முள்ளங் கருதிவாழுந், தாலவன முளததனைச் சாற்றினோர்
பவக்குறும்பை மாற்றி னோரே. (௧௰)

மின்கவருஞ் சடைமவுலிப் பெருமானார் நறையொழுக்
கும் விரைசேர் கொன்றை, யின்கணியார் பரவாதாரிடங்கணி
யார் முடங்கணியா ரிளவெண் கீற்று, நன்கலைவாண் மதித்

தொடையார் சிவலோகப் பிரதீசர் நயந்து வாழும், புன்கவன மொன்றுளதா லின்பமுறுந் துன்பமறும் போற்றினோர்க்கே.

ஏர்மலியு மறையோர்க ளியற்றுமகத் தெழும்புகையா னெழுந்தபோதிற், கார்மலியுந் தண்டலையாய்க் கொண்டலெனக் கண்டுமஞ்ஞை களித்துலாவு, நீர்மலியுங் கழனிதொறும் பயிருயிர்க்கு நித்திலம்வெண் மணிலவு காலுஞ், சீர்மலியுஞ் சுவேதவன மென்றுளது நினைப்பவர்மெய்ச் செல்வராவார்.()

முகிழுவன நெட்டிதழ்த்தா மரைமலரின் புரிமுறுக்கு முகைவாய் விண்டு, நெகிழுவன நடனமிட நடமிடுந் தோகையர்தென்றல் நெடுந்தேர் மேலூர், துகிழுவனங் கணைக்குடைந்து துயிலாத மணிமாடஞ் சூழ்ந்தவீதி, மகிழவன மதன்பேரை யுன்னுவார் நெடுங்கயிலை மன்னுவாரே. (கங)

இந்தவன மைந்தவற்றிற் சிறப்புமகிழ் வனமாகு மிதற்கா மெல்லை, யுந்தியகா விரிவடபா லொன்றரைநா ழிகையளவை யுறுந்தென் கீழ்பால், அந்தமுறு மாயூர மேற்றிசையிற் குறுக்கைவீ ரட்ட மாகும், முந்தியபச் சிமமுகமா முனம்யோக புட்கரணி முளரி மன்னும். (கச)

வடதிசையிற் சுந்தரே சுரதான குண்டமொன்று வைகுங் கீழ்பாற், றடமருவு குளிர்ச்சிதரு பஞ்சவடி யெஞ்ஞான்றுந் தழைத்து மன்னும், புடவிமிசை மகிழுவனந் தென்கயிலைச் சத்தியெலாம் போற்றப்பாடி, நடனமிட லாற்கான நிருத்தன சங்கர ராகு நாமந்தானே. (கரு)

சித்தர்சா ரணர்யோகர் அரிபிரம ரிந்திரா தித்தர் விண்ணோர், மெய்த்தவமா முனிவரறம் பொருளின்பம் வீடிவை தாம் வேண்டிக் கான, நிர்த்தனசங் கரர்பூசை நிரந்தரமும் புரிந்துதினை நேடு வார்க, ளித்தனைபே ரெனலரிதோ ராற்று மண லெண்ணுகினு மெண்ணொணாதால். (கசு)

வெண்மணலி லமைந்தமுத சிலாமயமாய் வாஷழப்பூவிம்ப மாகி, யுண்மைதிகழ் பஞ்சாக்க ரத்துருவாய்ச் சுயம்புவாயுலக மீன்ற, வண்மையளா நித்தியாம் பிகைபினுடன் புவிக் கெல்லாம் மகிழ்ச்சி நல்கிப், பண்மருவு மாநந்தம் பாடியாடிய கடவுள் பரிவாய் வாழ்வர். (கஎ)

பரிவுடனத் தலத்தரனைப் பூசித்தோர் தெரிசித்தோர் பரிசித் தோர்கள், கருதினவர் துதிக்குமவர் தலவாசஞ்செய்பவர் சேணகண்ணுற் காண்பேபார், பெருமைபெறு திருப்பணிகள் புரிந்தோர்க ளிறந்தோர்கள் பிறந்தபேர்கள், அரியசிவவடிவா கிப் பவமொழித்துக் கயிலைபிற்சென் றடைவர் மாதோ. ()

உலகுதனிற் பிறக்கமுத்தி யிறக்கமுத்தி யோர்தலத்தி லொவ்வொன் றாகும், அலகில்பல தலங்களுள அவையெலா மிதற்கிணையென் றறையலாகா, இலகுபுவிமேலறுபத் தாறுயிரங்கோடியிலிங்கம்யோகி, பலபதினாயிர வருஷம் பூசை செய்த பலனொருநாட் பார்த்தோர்க் கெய்தும். (கசு)

இப்பதியி னளவை கூற் றுமைந்துநா ழிகைப்பரப்பா மிறு வே முக்கண், மெய்ப்பரமனுறைந்தருளுந் தென்கயிலை கங்கையென விளங்குமன்றால், செப்புமை தீர்த்தமுள பிரளய காலம் வரினுஞ்சிதையா தாலே, யொப்பரிய நீடூரென் றொரு திருப்பே ரெப்பொழுது முரைப்பர் மாதோ. (உ0)

வரமருள்பத் திரகாளி சத்தமா தாக்கள்வயிரவரா தித்தர், திரமுறுசந் திராரு வாகனர்கார் மயிலூர்ந்த செவ்வேள் தண்டா, லுரமிகுதன் றுதைபின்று ளறவிசுந் தண்டீச ரும்பர் போற்றும், பரமனுறை திருக்கோயி லிடத்தமர்ந்து பூசை செய்வர் பத்தி கூர்ந்தே. (உக)

ஆறுபரு வத்துமலரிடையறு தலர்வருளா ரணியந் தன்னிற், கூறுகயி லையிலிருந்தே தேவியுடன் புனலாடல்

குறித்து வந்து, வீற்றிளமை வடிவாகி யெண்ணிலரம் பையர் சூழ விளங்கித் தோன்றிப், பேறுதரு மாநந்த ரூபதாண் டவம் புரிந்து பின்னு மாங்கே. (உஉ)

மன்னுதடங் காவிரிவாய்க் கங்கைமுத னதிகளாயா வா கனஞ்செய், துன்னுபுனற் றிருவிளையாட் டொருங்குநிகழ்த்தஞ் செங்கழுநீ ரோடை யாடி, பன்னுபழ மறைசேரு மகிழ்வன நீங் காதுறையும் பரமன் றன்னை, யின்னதிவா விபின்மூழ்கிப் பூசிப்போ ரளப்பிலர்க ளியம்புங் காலே. (உ௩)

வே று.

இந்துவா விக்குவளை யிரவிநெடுந் தேர்ப்பரிக்க
விந்துவா விக்குவளை யின்றமணிக் கதிர்விரிக்கும்
வந்துவா தாயனம்போல் வான்மகளிர் நடைபயில
வந்துவா தாயனந்தோய் மகிழவன நீடூரே. (உ௪)

நடுக்கரையார் தவம்போல நடுத்தேய்ந்து பூண்முலைக்கு
நடுக்கரையார் மேகலையார் நறும்பணிநீர் விளையாட
மடுக்கரையின் பானலங்கூர் மடலவிழ்செந் தேறலின்
மடுக்கரையின் பானலங்கூர் மகிழவன நீடூரே. (உ௫)

அதனருகே புன்கவன மயல்போதல் புன்கவனம்
நதிதடங்கள் கருத்திர்க்கு நாற்றிசையோர் கருத்திர்க்கும்
மதுகரங்கா மரம்பாடும் வயல்தொறுங்கா மரம்பாடும்
கதிதருவா மலைவில்லார் கருதினரே மலைவில்லார். (உ௬)

அங்கயிலை மகிழவன மார்க்குமெய்து மகிழவனம்
பொங்குமருங் காவேரி புடையமருங் காவேரி
மங்குறுடுங் கணப்புளின மருங்கயன்வா கனப்புளினம்
சங்கரர்தாட் காளானர் தாமரையுள் ளாளானர். (உ௭)

வேறு.

வரையி டக்கய மாகந் துடைக்குமே
வரையி டக்கய மாகந் துடைக்குமே
புரவி யப்புப் பொருந்திக் குலாவுமே
புரவி யப்புப் பொருந்திக் குலாவுமே. (உஅ)

மாணி டர்க்கித மாசி னகரமே
மாணி டர்க்கித மாசி னகரமே
யான கந்தன மலைக டந்ததே
யான கந்தன மலைக டந்ததே. (உகூ)

அந்த வாரண மங்கங்க ளிக்குமே
அந்த வாரண மங்கங்க ளிப்பரே
நந்த முத்தமி ழாவியி னண்ணுமே
நந்த முத்தமி ழாவியி னண்ணுமே. (௩0)

வேறு.

வான்புனலி லின்பவளம் வரம்பெலா மின்பவளம்
கான்பொழிலி னடத்தோகை கழைமதன்றே ரடத்தோகை
கூன்பணிலந் தான்குமிறும் கொம்பரினால் தாங்குமிறும்
தேன்பலவின் பருநீரே சிறக்கும்விளம் பருநீரே. (௩க)

வேறு.

இப்பதியி னெடுமாலுந் திசைமுகனும் புரந்தரனும் இமையோராதி, முப்புவனத் தவர்களும்பூ சித்திட்ட காமிய முன் முறையிற் பெற்றார், செப்பருமம் மகிழவனத் தலமகிமை யனைத்தினையுந் தேவி கேட்க, மெய்ப்பொருளார் கயிலையினில் விரித்துரைத்த சரிதையான் விளம்பற் பாற்றே. ()

தலமான்மியச் சருக்கம் முற்றும்.

# ௨-ஆவது கயிலைச் சிறப்புச் சருக்கம்.

நிலவு வெண்பிறை யாறணி செஞ்சடை நிமல
னிலகு பச்சைமா மயிலொரு பாகமா னிறைவன்
விலகி வில்லுமிழ் கருமணி மிடற்றிறை மேவிக்
குலவு வெள்ளியங் கிரிவளங் கூறுவ கேண்மின். (௧)

அனமு யர்த்தவன் மாயவ னிந்திர னமரர்
கனம லர்த்திரள் சொரிந்திரு கைமலர் முகிழ்த்துத்
தினம்வ ழுத்தியே பரம்பொருள் சேவடி செலுத்து
மனமெ னத்திகழ் கின்றது கயிலைமால் வரையே. (௨)

உலவு நீர்க்கட லுடுத்தபார் மடந்தைதன் னுளத்தி
னிலவு கின்றபே ரானந்த வெள்ளத்தி னிறைவா
யலகி லாதபே ரழகொடு மெழுந்தினி தமர்ந்து
குலவு மற்புதம் போன்றது கயிலையங் குன்றம். (௩)

மங்கை பங்கனுர் கொடுத்தருள் வரமென வளர்ந்து
துங்க மெய்யொளி பழுத்துவெண் ணீறெனத் துலங்கி
யங்கண் வானவன் சரிதைபோ லளவிடற் கரிதாய்ப்
பொங்கு பாரிடைப் பொலிந்தது வெள்ளியம் பொருப்பே.

திகழும் வாணில வெறித்திடு வெண்மையிற் சிறந்து
பகல வன்கலை மதிவலம் வரக்கதிர் பரப்பி
நிகரி லாயிர கோடிபொற் சிகரங்கள் நிறைந்து
ககன கூடமுங் கடந்தது கயிலையங் குன்றம். (௫)

பூத நாயகன் பிறையணி செஞ்சடைப் புநிதன்
பாத தாமரை பணிந்திடப் போந்தபங் கயத்தோன்
வேத வோசையுந் தும்புரு நாரதர் வீணைக்
கீத வோசையு முழங்கிடுங் கயிலையங் கிரியே. (௬)

MAHAMAHOPADHYAYA

வேயு குத்தவெண் டரளமும் வேழவெண் மருப்புத்
தூய முத்தமுஞ் சந்தமுங் காழகிற் றுணியும்
பாயொ ளிப்பசுங் கனகமும் பரப்பிநீ ரருவி
யோய்வு றுதிழி ளமிருங் கயிலையா மோங்கல். (எ)

தாவி னேர்பெறு கொடுமுடி தங்குறு மிறுவின்
மேவு தேறலும் வருக்கையு மரம்பையும் விண்தோய்
மாவி னொண்கனி யிலிற்றிய நறைகளு மலர்ந்த
பூவின் வோரியு மருவியிற் குலவும்வெண் பொருப்பு. (அ)

மத்த யானையு முடங்குளை மடங்கலு மானு
மொய்த்த வேங்கையும் பணிகளு முதுசிறை மயிலும்
ஒத்து வாழ்வுற எம்பிரா னினிதமர்ந் துறையும்
அத்த டங்கிரி மகிமையா முரைப்பதற் கரிதே. (கூ)

வேறு.

அந்த மால்வ ரைக்கு ளால டிக்கண் மேவு பாறையிற்
சிந்தி யாறு பருவ முஞ்சி றந்து தேனொ ழுக்கறாக்
கந்தம் வீசு நாண்ம லர்க்க லந்த பொன்னி றத்தவாய்
நந்தி டாத கற்ப கத்த ருப்பொ தும்பர் நாப்பணே. (க0)

எண்ணி லாத வெயில்ப ரப்பு மிரவி கோடி யொன்றிய
வண்ண மாய்ப் பதும ராக மணியி ழைத்த மண்டபத்
துண்ணி லாவி மதிக ணொ ளிலகெ லாம்வி ளக்கிடுந்
தெண்ணி லாவெ றித்தி லங்கு மிந்து சாலை தன்னிலே. (கக)

வேறு.

பதிக்கு மாமணி பற்பல கிரணங்கள் பரப்பித்
துதிக்கும் வாளரி சுமந்தபொற் பீடிகை துலங்க
மதிக்கு மாசுணக் குண்டல மிருபுடை வயங்கக்
குதிக்கு மான்மறி தழன்மழுச் செங்கையிற் குலவ. (கஉ)

கற்றை வார்சடைக் கங்கையுந் திங்களுங் கவினெ
நெற்றி நாட்டமு நீலகண் டமுமொளி நிலவ
வொற்றை வெண்மருப் போங்கலுங் கூங்கொடி யுயர்த்த
வெற்றி வேலுடைக் கடவுளு மிருபுடை விளங்க. (கங)

புன்ன காதியர் வித்தியா தரர்சித்தர் பயிலுங்
கின்ன ராதியர் கிம்புரு டாதியர் கேண்மை
துன்னு சாரண ரியக்கரா தியர்பலர் சூழ்ந்து
மன்னி யேதிரு வாயிலில் வந்தடி வணங்க. (கச)

பைந்து ழாய்மணி மார்பனும் பங்கயப் பரனும்
இந்தி ராதியர் முதலிய தேவர்கள் யாரும்
முந்து நான்மறை முனிவரு முறைமுறை யீண்டி
நந்தி வாயிலி னற்றமோர்ந் தருதின நண்ண. (கரு)

பானு கம்பன்வா யாயிரம் பணிலம் வைத் தூத
வான கங்கிழி படவடல் மதுகைசேர் வாணன்
நானி லம்புகழ் குடமுழ விரட்டிட நடித்துக்
கான முஞ்சில பாடிப்பல் பூதங்கள் களிப்ப. (கசு)

நின்ற பூதங்கள் பலபல பல்லிய நிரைப்ப
வொன்று மோசையிற் றிசையெலாஞ் செவிடுபட் டொதுங்கத்
துன்று சாமரை யிரட்டியே யரம்பையர் சூழ
மன்றன் மாலிகை கொற்றவெண் கவிகைமேல் வயங்க. (கஎ)

பண்ணை மைத்திசை யோர்ந்தகந் தருவர்யாழ் பயில
வெண்ண கைச்செழும் பவளவா யின்னிசை மிழற்றி
நண்ணு செம்பொனுட் டரம்பையர் நடம்பல நடிப்பக்
கண்ணெ ராயிரம் வேண்டுமென் றனைவருங் கருத. (கஅ)

உம்பர் நாயக ரொருதனி நாயக ருரைசே
ரிம்பர் நாயகர் யாவர்க்கு நாயக ரிலங்கு

மம்பொ னீண்முடி யிமயவெற் பரசனீன் றருளீம்
விம்ப வாயித ழுமையொடு மரசுவீற் றிருந்தார். (கக)

அலங்கன் மாமதி சூடிய சடைமுடி யண்ணல்
இலங்கு பார்ப்பதி தன்னொடு மரசுவீற் றிருந்தே
துலங்கு மால்வரைச் சிறப்பினின் வகைசில சொன்னோம்
நலங்கொள் புட்குலங் கணங்களாய் வந்ததை நவில்வாம். ()

கயிலைச் சிறப்புச் சருக்கம் முற்றும்.

---

## 3-ஆவது கணநாதர்ச் சருக்கம்.

நீடு வெள்ளியங் குன்றினிற் கதிரொளி நிலவு
மாட கப்பசும் பொன்னொடும் பன்மணி யழுத்திப்
பீடு சான்மணிக் குடநிரைத் திடுபெருஞ் சிகரி
கோடி கோடிவிண் ணுறநிமிர்ந் திடுதடங் கோயில். (க)

இலங்கு கோயிலுள் வச்சிரத் தூண்பல வியற்றித்
துலங்கு மண்டபத் தெழுநிலை மாடமேற் சுடரப்
பொலன்கு யிற்றிய வேதிகை நாப்பணிற் புனையு
நலங்கொள் மான்மதங் கமழ்தர நறுமலர் நாற்றி. (உ)

அமையு நீடெழி லாசனத் தழகுட னமர்ந்து
கமழ்க ருங்குழற் செந்துவ ரிலவிதழ்க் கனிவாய்க்
குமுத வெண்ணகைப் பசுந்தொடை மதர்விழிக் கோல
இமய மாதொடு மெம்பிரா னினிதுவீற் றிருந்தார். (ங)

இருந்த காலையி லெம்பிரா னுவகைவந் தெய்தக்
கருந்த டங்கண்வெள் வளைப்பசுங் கிளிமொழிக் கலை
முருந்த வாணகை மொய்குழ லுமையொடு முயன்று
பொருந்து சூதினை யாடுவான் தொடங்கிய போதில். (ச)

மிக்க முக்கணு மான்மழு வுங்கறை மிடறும்
அக்கு மாலையும் கோடிமன் மதனணி யழகுஞ்

செக்கர் மேனியுந் திமிர்ந்தவெண் பூதியுஞ் சிறக்கப்
பக்க மாதொடுஞ் சிலகண நாதர்கள் படர்ந்தார். (ரு)

படர்ந்து வாகன மேற்கொடு நின்றவர் பரவி
மடங்க லாசனத் தரசுவீற் றிருந்தபெம் மானை
யிடங்கொள் கண்டனைக் கண்ணுதற் கடவுளை விருப்பி
னடங்கி டாமனத் தன்பொடு மடிபணிந் தடைந்தார். (சா)

## வேறு.

அக்க ணங்களை நோக்கிய வாயிழை
யிக்க ணங்களெ வரென்றி சைத்தலும்
கைக்க ணங்கர வார்த்தக யிலைவாழ்
முக்க ணம்பர்வி ரித்துமொ ழிகுவார். (எ)

பத்தர் யோகர்ப ணியும்ப தியதா
மித்த லத்திற்க யிலைக்கி னையது
மைத்த டங்கண்ம ருங்குமுற் செய்யவாய்
முத்த மூரல்மொ ழிகுவன் கேட்டியால். (அ)

மன்றல் வீசும்ம யூரத்த லத்துக்குந்
துன்று கின்றசு கந்தவ னத்துக்கும்
ஒன்றி யோர்திக ழுத்தர திக்கினில்
நன்றி கூரவி ளங்கிடு நம்பதி. (கூ)

காவி ரிக்குவ டகரைக் கானிறை
பூவி ரிக்கும்பொ தும்பர்ம கிழ்வன
மேவி ரிக்குங்க ணேந்திழை யேமறைப்
பாவி ரிக்கும்ப திகட்க திகமால். (கo)

அத்த லத்தில ளிக்குல மார்த்திட
நித்த மும்மலர் செங்கழு நீர்த்தட
மொய்த்த சந்தம ரப்பணை முன்னிவாழ்
தித்தி ரிச்சிறு பார்ப்பினைத் தின்னவே. (கக)

அம்ம ரத்தினி லாழ்ந்தபொ தும்பரில்
செம்ம ணிக்கட்செ விக்கவை நாப்பொறிப்
பைம்மி குத்திடு நாகம்ப சித்தழல்
வெம்மை யுற்றுவி ரைந்தெழு காலையில் (கஉ)

பருந்தொன் றும்பர்ப்ப றந்துதெய் வீகமாய்ப்
பொருந்து பார்ப்பைப்பு குந்துக வர்ந்ததை
யருந்தி டாதுகொண் டேகுமவ் வேலையிற்
றுரந்து புள்ளர சொன்று தொடர்ந்ததால். (கங)

வேறு.

பாறுந டுங்கியொள் வாளுகிர் பற்றிய•பார்ப்பொடு பகு வாயி, லூறுப டுஞ்சிறு கூவலும் விட்டவை யோடுக டக்கரி தாய்க், கூறிய விண்ணவர் மண்ணவர் யோகர்கு ழாங்கள்கு டைந்தாட, நாறிய செங்கழு நீர்மலர் வாவியி னுப்பண்வி ழுந்தனவே. (கச)

ஆவியில் வந்துவி ழுந்தும யங்கிய ரற்றிய் குரலோடும்
ஆவி விடும்பொழு தன்புடை யாளதி காம்பிகை யோடுங்கற்
றுவினி ரங்கிநம் மக்கர மைந்துப தேசம ளித்தனமா*
லாவினை நன்மைவி டாதுகொ லக்கண மிக்கண மாகியவே. ()

வேறு.

ஆதலினால் நம்முன்ன மடைந்தாரிக் கணநாதர்
தீதில்வகு ளாரணியச் செங்கழுநீ ரோடைதனிற்
பாதகர்கள் படிந்தாலு நம்முருவாம் பதம்பெறுவார்
காதலினால் யாமிருக்குங் கயிலையா மப்பதியே. (கசு)

அப்பதியுற் றவரேனு மாவிதுறந் தனரென்றாற்
செப்பியபஞ் சாக்கரத்தை யுபதேசஞ் செய்திடுவோம்
ஒப்பினம துருவாகி யுயர்கணங்க ளாயிருப்பார்
மெய்ப்புவனத் தினிலுரைக்க வேறுபதி யிலையென்றார். ()

இவ்வண்ணஞ் செங்கழுநீ ரோடைவள மெம்பெருமான்
மைவண்ணக் கருங்கூந்தல் மலைமகட்கு மகிழ்ந்துரைப்பக்
கைவண்ண மழுவுடைய கண்ணுதலே அத்தலஞ்சென்
றவ்வண்ண மலர்வாவி யாடு தும்மா மெனமொழிந்தாள். (கஅ)

என்றதுமே கயிலையினின் றெழுந்தருளி யேறேறி
மன்றல்கமழ் மகிழ்வனச் செங்கழுநீர் வாவியில்வந்
தன்றுடனாற் றிருவிளையாட் டயர்ந்துமலை மகளுடனே
பொன்றகயி லாசகிரி யிதுவென்ன வுளத்துவந்தார். (க௯)

எனச்சூதர் கணநாதர்க் கிசைத்தகதை தனையுரைப்ப
மனத்தூய முனிவரர்கள் வினவிமிக மகிழ்கூர்ந்து
சினத்தீமை கடிந்தருளுந் தேசிகரே மழைமுகில்வா
கனத்தேவர் கோன்கதையை விரித்துரைக்கை கடனென்றார்.

கணநாதர்ச் சருக்கம் முற்றும்.

---

## 4-ஆவது இந்திரன் பூசைச் சருக்கம்.

முனிவர்மொ ழிந்திட வினவிய சூதமு னிக்கோமான்
இனிதெனமா னுலகைந்தரு நிழலி லிந்திரன்முன்
புனிதமி குஞ்சிவ பூசைபு ரிந்ததைப் புகல்வேன்யான்
நனிபெற அன்பொடு கேண்மினெ னத்தனி நவில்கின்றான்.

ஆர்கலி சூழ்புவி மேலிர தந்திர கற்பத்தில்
மார்கழி மாதத் தாதவ னுதயம்வ ரும்போதிற்
சீர்கெழு காவிரி தீரத் திடையே சிவபூசைக்
கேர்கெழு நற்றல நாடின ரிந்திர னிமையோரே. (உ)

நாடிய விமையோர் முற்சென னத்துறு நற்சுகிர்தங்
கூடிய தென்னக் காய்கனி மூலங் குளிர்கழுநீ

ரோடைநல் வாலுக மகிழ்வ னங்கண் டுள்மகிழ்வாய்த்
தேடிய சிவபூ சைக்கிட மீதுசி றப்பென்றே. (௩)

பூதல மங்கைமு லைக்கணி யாகிய பொன்னுடை
யீதென நீடிம சையவ ரைக்கணி லங்கியநீர்
நாதமி குந்தெழு பூவிரி காவிரி நண்ணிமையோர்
மேதகு செம்பொன்வி மானமி ழிந்தனன் மேவினரால். (௪)

தேடிய கங்கைக் கிணையென முன்னால் செப்புஞ்சீர்
கூடிய பேரா னந்தத் தீர்த்தங் குதிகொள்ள
ஆடிய விந்திரன் முதலிமை யவரா கரமென்னப்
பாடிய வேதத் தோதைய ரந்தண ரெல்லாம். (௫)

அக்கா விரிநீ ராநந் தப்புன லாடிப்பின்
மிக்கா கியசெங் கழுநீ ரோடையின் மிகமூழ்கி
யெக்கா லமுநிலை பெற்றிட வெவ்வே றிமையோர்கள்
தக்கா ராகிச் சைகத லிங்கந் தாபித்தார். (௬)

அவ்வே லையினில் விண்ணவர் கோமான் கழுநீர்கு
ழிவ்வே லையிலக மகிழ்புகழ் நீடு ரெழின்மீறச்
செவ்வா கமவிதி முறையா லுடையாள் சேர்வித்துத்
தவ்வா தழகிய சைகத லிங்கந் தாபித்தான். (௭)

தாபித் திலகிய லிங்கந் தன்னிற் றன்னுள்ள
மேவித் திகழுங் கடவுளை மந்திர விதிமுறையாற்
பாவித் தாவா கனமுஞ் செய்தே பரையோடுஞ்
சேவித் தருகிப் பூசனை செய்துதி யாணித்தே. (௮)

வானவ ருலகுத ழைத்திட மேவிய வண்காம
தேனுவி னெய்பொற் றகழியி லிட்டதி ருத்தீபம்
நானில முந்திசை யெட்டும்வி ளங்கிட நன்கெய்து
பானுவொ ராயிர கோடியி னல்கப் பாலித்தே. (௯)

பாறயிர் நெய்தேன் பஞ்சகௌ வியமொடு பைங்கன்னற்
சாறிள நீர்முக் கனிகுங் குமசந் தனமெண்ணெய்
ஊறுநெள் ளமுதம் பஞ்சா மிர்தமெய் யொளிரும்பை
விரிய நாண்மலர் காவிரி தடநீர் ரீதாட்டி. (க0)

மாசறு வெண்பட் டாடைக ரித்துநன் மணமெங்கும்
வீசக ருப்பூர சந்த விலேபன மேயப்பி
மூசமு ருக்கமழ் கற்பக மாலிகை முடிசூட்டித்
தேசொளிர் பன்மணி யாபர ணம்பல சேர்த்தாங்கே. (கக)

தேவியொ டீசன் திருவுரு வைஞ்சத் தினிலெண்ணி
மேவிய நல்லோ ரையினிற் குளிர்கா விரிநீர்பாய்
காவிய வள்ளற் செய்ப்பிற் குளநெற் றனிவிக்கைத்
தூவினா னிந்திர னேமுத லாயவரு சுரரெல்லாம். (கஉ)

வித்திடு மக்கண மேமுளை யாயிலை விட்டிடனே
முத்தலை வெளிற் கவரா கிக்கரு முதிர்கதிராய்
வித்தகர் போலச் சென்னிவ ளைந்துவி ளைந்துபலன்
சித்திய தாய்வர வதிசய மெய்தினர் தேவரெலாம். (கங)

அக்குள நெற்கதிர் கொய்துதி ருத்திய அரிசியினைத்
திக்குள பர்சைப் பயறுப ருப்புச் சேர்வித்தே
யிக்குள முப்புடை யின்கா யின்கிற் றிவையெல்லாம்
மிக்குள மகிழப் பொங்கற் சுரபிநெய் விரவியுமே. (கச)

பாயத மாதிய தங்கள்ச மைத்துப் பசுவின்னெய்
தூயவா ரம்பைக் கனிபல வின்கனி சூதத்தின்
ஆயந றுங்கனி யிஞ்சியொ டேலமு மமைவித்து
நாயகன் முன்புநி வேதன மிவைகண லஞ்செய்து. (கரு)

## வேறு.

திருக்குறு தூபங்கள் தீபங்க ளாதியா
யுரைத்த சோடச மாபூப சாரமும்
நிறைத்த வில்வம்பொற் றாமரை நெய்தற்பூ
தரித்த செங்கழு நீர்தும்பை சாத்தியே. (கசு)

மங்குல் தோயு மகிழ்மரக் கற்பகம்
பொங்கர் நாண்மலர் மந்திர புட்பமா
யங்க ணுளர் மகிழ அருச்சித்துச்
செங்கை யாரப்புட் பாஞ்சலி செய்தனன் (கஎ)

வேத நான்கினு மிக்கது வாமென
வோது சிருக்கி ரமந்தி ரத்தினால்
ஆதி யாகும ழகசி வாமய
மாது பங்கனை வாழ்த்தி வலஞ்செய்தே. (கஅ)

இன்ன ணஞ்சிவ பூசைபி யற்றியும்
பொன்னி நாட்டுப் புத்தேளிர்கு ழாத்தொடு
மென்னை யாளுடை யீசர்ப தத்தன்பு
துன்னு தோத்திரஞ் செய்யத்தொ டங்கினன். (ககூ)

ஆதி யேமெய் யருளின் சலதியே
சோதி யேசெஞ் சுடர்க்கொழுந் தேயுமை
பாதி யேயும்ப ரம்பொரு ளேமறை
நீதி யேமகா நின்மல மூர்த்தியே. (உ0)

பால லோசன பாற்கட லூடெழு
மால போசன மன்னுநா கர்க்கருள்
மூல கார ணமுக்கணெண் டோண்முனைச்
சூல பாணிய தூய்யபொன் மெய்யனே. (உக)

நித்த னேயெண்ணி லாவுமிழ் நீறணி
சுத்த னேவிடை யேறிமுன் தோன்றிடு

மத்த னேயதி காம்பிகை பங்கில்வாழ்
முத்த னேயெமை யாளுமு தல்வனே. (௨௨)

அண்டர் நாயக னேஅமு தேதகைக்
கண்ட னேசெஞ்ச டாடவிக் காட்டுளங்
தூண்ட வெண்பிறை சூடிய சோதியே
ஆண்டு லாவும கிழ்வன நாதனே. (௨௩)

அன்ன மேலய ழகாவொளிர் செங்கழல்
என்ன மேமழு மான்மறிக் கையனே
தன்ன ருமலர்த் தாரின னேகிரி
கன்ன னேயெனை யாளுங்க டவுளே. (௨௪)

புண்ட ரீகபு ராதன னாதனே
புண்ட ரீகபு ராதனன் றோழனே
கண்ட னேகங்கை யன்றொழு மோர்திருக்
கண்ட னேகங்கை யாள்பகி ரீசனே. (௨௫)

மத்த மாலைம கிழுவ னத்தனே
மத்த மாலைம கிழுவ னத்தனே
சித்த மாலைய றத்தெரி சித்தனோர்
சித்த மாலைய றத்தெரி சித்தனே. (௨௬)

அம்ப ரத்துரு வாகிய சோதியே
அம்ப ரத்தனி யாகிய வாதியே
அம்ப ரத்திசை யாடைப் பாதனே
அம்ப ரக்கடு வுண்டரு ளண்ணலே. (௨௭)

சீத ராகந்தி கழ்சிறு வாணுதல்
ஓத ராகவு பாயத னம்புச
மாத ராகம கிழ்ந்தழ காய்ப்பல
பேத ராகிப்பி றங்கிய வீசனே. (௨௮)

நெற்றி நாட்டமெந் நாப்பெழச் சீறியே
வெற்றி மேவிலி ழிக்கெரித் தாய்நெடும்
பொற்ற டங்கிரி போற்பொலிந் தோங்கிய
கற்றை வார்சடைக் கரந்தை யூர்த்தியே. (௨௯)

எனத்து தித்தன னிந்திர னேனவை
ரனைத்து மோர்ந்தஅ ருந்தவர் சூதனை
முனிச்சி காமணி முக்கணர் தோன்றியே
யனைப்பி னுடைய கிமைமை பூத்துளான். (௩௰)

இந்திரன் பூசைச் சருக்க முற்றும்.

---

## 5-ஆவது கான நிர்த்தனச் சருக்கம்.

நின்றுதோத் திரங்கள் செய்யும் நெடும்புய லூர்தி முன்னர், கன்றுமான் மழுக்கை யேந்துங் கண்ணுதற் சிற்சொரூப, மொன்றுமா னந்த கானத் தோங்கிய நடனத் தோடுந், துன்றிய விலிங்கத் தூடுந் தோன்றினார் தோன்றி டாதார். (க)

செஞ்சடைக் காடு தோன்றச் சிறுபிறைக் கொழுந்து தோன்ற, வஞ்சிறைத் தும்பி பாடு மலர்ப்படுங் கொன்றை தோன்றப், பஞ்சபா ணனைமுன் காய்ந்த பார்வையா னுதலிற் றோன்ற, வெஞ்சினப் புலித்தோல் தோன்ற வேழத்தி னுரிவை தோன்ற. (௨)

கைபின்வெஞ் சூலந்தோன்றக் கறையொளி மிடற்றிற் றோன்றச், செய்யமா முகத்தி னூடுச் சிறுநிலா முறுவல் தோன்றப், பையரா வணியுந் தோன்றப் பரிபுர மறைகள் தோன்ற, ஐயரா னந்த கானத் தணிநடஞ் செய்ய லுற்றார். ()

உலவுமா தித்தியாம்பை ஒருபுறத் துவந்து போற்ற, இலகுமைங் கரனும் வேற்கை யிளவலு மிருபாற் போற்ற,

அலகிலா முனிவர் திக்குப் பாலக ராதி யாய, நிலைமைசேர்
கடவுளோர்கள் நிரைநிரை நெருங்கிப் போற்ற. (௪)

சித்தரோ டியக்கர் வித்தி யாதரர் சிறந்து போற்ற,
ஒத்தகின் னரர்கள் பாட வுவந்தகிம் புருடர் போற்றச்,
சத்தமா முனிவர் கானந் தழைக்க கந்தருவர் போற்றப்,
பைத்தலைச் சுடிகை நாகர் பரிவுடன் பணிந்து போற்ற. (௫)

தும்புரு நார தாதி துதித்தடி தொழுது போற்ற, வம்
பர்மா மிரவி திங்க ளுவப்புடன் பணிந்து போற்ற, இம்பரின்
மறைவல் லோர்கள் யாவரு மிறைஞ்சிப் போற்றக், கம்பலைக்
கங்கை யாதி நதிகளுங் கலந்து போற்ற. (௬)

செங்கண்மால் பிரம னின்று தெரிசித்துப் போற்றி
செப்ப, அங்கண்மா ஞுலகு காக்கு மமரர்கோ னன்புகூர்ந்து,
பொங்குமா நந்த வெள்ளப் புணரியின் மூழ்கி யோங்கும்,
எங்கணா யகனே யென்றே யிணையடி யிறைஞ்சிப் போற்ற.

வேறு.

அஞ்சக் கரகளத் தானையுரித் தாயனகா
அஞ்சக் கரகவளத் தானையுரித் தாயனகா
அஞ்சக் கரத்திருக்கை யாநந்தத் தாண்டவனே
அஞ்சக் கரத்திருக்கை யாநந்தத் தாண்டவனே. (௮)

வேறு.

குளிரி ஞரவ குளவன் ஞட்டக்க
குளிரி ஞரவ குளவன் ஞட்டக்க
தளரு மாக்குழை சங்கர வானவ
தளரு மாக்குழை சங்கர வானவ. (௯)

### வேறு.

நீடூரின் மகிழுமா, நீடூரின் மகிழுமா,
ஆடூர்ப்பணி யின்னே, பாடூர்ப்பணியின்னே. (௧௦)

### வேறு.

சங்கர நாதா போற்றி சச்சிதா நந்தா போற்றி, பங்கி யத் தயன்மால் காணாப் பரிபுரப் பதத்தின் காட்சி, நங்களுக் கருள வந்த நாதனே போற்றி வெங்கட், பொங்கர வணிந்த் வேணிப் புநிதனே போற்றி போற்றி. (௧௧)

அன்றுமை யடர்ந்து சீறு மந்தகா சுரனைக் கொன்று, வென்றருள் புரிந்தாய் போற்றி விடைவரா நாண்பி ணரித்துக், குன்றனில் வளைத்தெம் மேவார் கொடும்புர மெரித்தாய் போற்றி, மன்றல்சேர் மகிழ்வ னத்தில் வரதனே போற்றி போற்றி. (௧௨)

பாலனுக் காக வெய்ய பாசம்விட் டெறிந்து சீறுங், காலனைக் காலால் வீட்டுங் கடவுளே போற்றி செங்கட், கோலவெள் ளேறு யர்த்த குழகனே போற்றி பண்டோ, ராலநீ ழலில மர்ந்த அமலனே போற்றி போற்றி. (௧௩)

சுருதியின் முறையாற் சத்த சுரங்களின் கானம் பாடித், தருவொடும் பரமா நந்தத் தாண்டவம் புரிந்தாய் போற்றி, மருமலி மகிழ்வ னத்தில் வளர்ந்தசை கதலிங் கத்திற், றிரு வருள் சுரந்து நின்ற சிற்பரா போற்றி போற்றி. (௧௪)

இருங்கதி வேண்டுந் தொண்ட ரிதையவெண் டாம ரைப்பூ, மருங்கமர் தாது போன்றுங் குளநெல்லின் வாற் கூர் போன்றுஞ், சுருங்கலில் பசும்பொ னென்னத் துலங்கி யெட் கெண்ணெய் போல, நெருங்குயிர்க் குயிராய் நீடூர் நிறைந்தவா போற்றி போற்றி. (௧௫)

அங்கணா யகனே போற்றி அடியவர்க் கெளியாய் போற்றி
திங்கள்வே ணியனே போற்றி சிவபெரு மானே போற்றி
மங்கையோர் பாகா போற்றி மறையெலாந் துதிக்க நின்ற
எங்கணா யகனே போற்றி யீசனே போற்றி போற்றி. ()

அந்தமு நடுவு மின்றி ஆதியோ டனாதி யின்றிச்
சுந்தர வடிவ மாகிச் சுருதிகட் கெட்டா வாகி
விந்துவாய் நாத மாகி விளங்குசின் மயமு மாகிச்
செந்தழற் பிழம்பாய் நின்ற தேவனே போற்றி போற்றி. ()

வேறு.

உந்து மூழ்வினை யாலுண் மயங்கிய
சிந்தை யின்றுயர் தீர்த்தருள் செல்வனே
தந்தி மாமுகன் றன்னொடுஞ் சண்முகக்
கந்த வேளையு தவுங்க டவுளே. (௧௮)

குன்ற வார்சிலைக் கொற்றவ னேநறு
மன்றல் வீசும கிழ்வனத் தெந்தையே
என்று வானுல கிந்திரன் போற்றியே
நின்று தோத்திரஞ் செய்துதி கழ்ந்தபின். (௧௯)

வேறு.

கோல மருப்படர் குரவன் றுவரா
கோல மருப்படர் குரவன் றுவிரா
ரால மடுத்தவ னமலை யிடத்த
னால மடுத்தவ னமலை யிடத்தனே. (௨௰)

அந்தரத் தானவ னைசையு டைத்தான்
அந்தரத் தானவ னைசையு டைத்தான்
கந்தரத் தானவன் கான்மகிழ் வானேன்
கந்தரத் தானவன் கான்மகிழ் வானேன். (௨௧)

மதியங் கொங்குள மாசடை யார்தனை
மதியங் கொங்குள மாசடை யான்பெருங்
கதையினை யந்தத் தீர்த்தவன் கண்ணகல்
கதையினை யந்தத் தீர்த்தமுங் காட்டினேன். (உஉ)

## வேறு.

அரிய தும்பை மலர்க ளால ருச்ச னைபு ரிந்ததும், உரிய தான சோட சோப சார மும்மு வந்தனம், வரிநெ டுங்க ணிந்தி ராணி மகிணை நல்லை ரங்கணீ, தெரிய வின்று கேட்டி யென்று செய்ய வாய்ம லர்ந்தனன். (உ௩)

மங்கை பாக னது பூசை மனம கிழ்ந்து மார்கழித்
திங்கள் மேவு மாதி ரைசி றந்த நாளி லருணருடன்
துங்க கான நிர்த்த னந்து லங்கவே புரிந்தனை
யிங்கு நீயு வந்தி ருந்தி யிவ்வி லிங்க ரூபமாய். (உ௪)

நாத விந்த மார்க ழித்தி னத்தில்மிக்க நாளிலுன், பாத காம ரைக்கு அன்பு பற்று தொண்டர் பாதகஞ், சோதி விசு தியி னிற்செ ரிந்த பஞ்ச தாகியே, தீத கற்றி நற்க திச்சி றப்பு நல்க வேண்டுமே. (உ௫)

சிந்தை நின்ப தந்தி ருந்து திடமெனக்கு நல்கியா, னந்த தீர்த்த மிந்த வோடை நற்பு னற்ப டிந்தனைப், புந்திகூர்ந்து தெரிசனம்பு ரிந்தபேர்க்குன் பூசனை, வந்த வாண்டு பன்னி ரண்டில் வருப லன்வ ழங்கியே. (உ௬)

உலவுகின்ற கீர்த்திவாய்மை யுண்மைஞான வாழ்வுடன், குலவு செல்வ மெட்டுமிக்க முத்தியுங்கொ டுத்துநீ, யிலகு மிந்த மகிழ்வனத்தி லிவ்விலிங்க வடிவமா, யலகில்ஞான நிர்த் தனஞ்செய் தருளவேண்டு மென்றனன். (உ௭)

அந்த வாசகங்கள் கேட்ட அண்ணலுண்மகிழ்ந்தெலாந், தந்தனம்மு னக்கெனத்த யாவின்முன்ன ரெய்தியே, மந்தமாரு தங்குலாவு மகிழ்வனத்தி ருந்தனர். இந்திராதி தேவர்கட்கி தையமுங்கு ளிர்ந்தவே. (உஅ)

இன்னவாறு சூதர்சொல்ல இனிதுகேட்ட முனிவர்கள், மன்னுகின்ற வுவகையென்னும் வாரிபிற் படிந்தனர், பின்னும் வானி லிரவி பூசைசெய்து பேறு பெறுகதைத், தன்னை நீவி ரித்துரைத்தி யெனமகிழ்ந்து சாற்றுவார். (உகூ)

காஞ்ன நிர்த்தனச் சருக்கம் முற்றும்.

## 6-ஆவது ஆதித்தன் பூசைச் சருக்கம்.

பந்தப்பெரு நிதமாகிய பாசத்திரு ளகலச்
சிந்தைக்கம லத்தூடெழு செஞ்சோதியை யுணர்வீர்
முந்துற்றொளிர் கதிர்பூசைசெய் முறையானவைமொழிவேன்
புந்தித்தெளி வொடுநீவிர்கள் புநிதத்தொடு கேண்மின். (க)

அமுதப்பிறை முடிவானவ னருள்கூர்வலக் கண்ணில்
விமலக்கிளை வில்வத்தொடு வெய்யோன்முன் னுதித்தே
யிமயக்கிரி யுமைபாகனை யிதையத்தினி லெண்ணிச்
சிமையப்பெரு மகமேருவிற் செய்தான்மிகு தவமே. (உ)

பக்கத்துறை யுமையாளொடு படர்மால்விடை யேறி, முக்கட்சுடர் திகழ்வானவன் முன்னின்றிவை மொழிவான், மிக்குத்தவ மேசெய்யவி யந்துள்ளக மகிழ்ந்தெந், கொக்குக்கயல் விக்கித்திரி குடகாவிரி வடபால். (ங)

முந்துற்றகுஞ் சக்கேத்திர மொன்றுண்டதன் முன்னே, விந்தத்தலர் மணம்வீசிட மிளிர்யோகபுட் கரணி,

சிந்திப்பவர் தெரிசிப்பவர் செய்தீவினை நீக்கும், அந்தப்பதி
யின்கீழ்த்திசை யமரும்மகிழ் வனமே. (௪)

காராடிய வானந்தொடு கமழ்சந்தன வனமும்
பேராடிய கயிலைக்கிணை பிறழ்வாலுக நிரையும்
வாராடிய முலைவாணுதல் வானத்தர மகளிர்
நீராடும லர்ச்செங்கழு நீரோடையு முளவாய். (௫)

மறைவேதியர் புரிகின்றம கத்திற்புகை தன்னை
நிறைவேலைபி னீருண்டெழு நீலப்புய லென்றே
நறைவார்குழல் மடமாதர்ந டிக்குந்திற மென்னச்
சிறைமாமயில் நடனம்புரி செய்குன்றுகள் பலவாய். (௬)

வேரேரிய மாகுங்கடல் மேல்விண்கதிர் வீசுங்
கூடேர்மதி யெனவால்வளை குளிர்மாமணி சொரிய
வேரேர்நறை மணம்வீசிட விந்தீவர மலரும்
நீடேரென வொருபேர்பெறு நிலைமைத்தல முளதால். (௭)

போதாசன னெடுமாலுயர் புயல்வாகன னிமையோர்
மாதாபதர் துதிசெய்யுமவ் வருளாரணி யத்தில்
ஆதாரமெய் யொளிபெற்றிடு மதிகாம்பிகை யென்றே
யோதாரண முதலானவை யுறுதோளியொ டுறைவோம். ()

வேறு.

பின்னிய மலைபோ லலையெடுத் தெறியும் பிரளய கால
த்து மழியா, வுன்னத மான மகிழ்வனத் திருநீ டூரினி லுவ
கையிற் போந்து, முன்னமோர் கற்பா தந்தர முற்ற மார்கழித்
திங்களின் முறையாய்ப், பொன்னகர்க் கிறைவர் முதலினோ
ரெம்மை யுமையொடும் பூசனை புரிந்தார். (௯)

அப்பொழு தமரர் நாயகன் போற்று மமுதசி லாமய
விலிங்கத், தொப்பிலா னந்த தாண்டவம் புரிந்தே யுயர்வரம்

யாவையுங் கொடுத்தேம், றுப்புறழ் கனிவாய்க் கெண்டையங் கடழ்கட் சுரிகுழ லுமையொடுந் துலங்கி, யெப்பொழு தினு மியா முளமிக மகிழ்கூர்ந் தினிதுப்ப சன்னரா யிருப்போம்.

அம்புயன் வகுக்கு மம்புவி யம்பு தேயுவோ டநிலமா காச, மும்ப ரோடிம்பர் சராசர மெவையு மொடுங்கிய கால த்து மழியா, நம்பதி பலவுண் டெற்றினுஞ் சிறப்பாய் நமக் கினி தாகியே துலங்கும், பம்புநீர்ப் பொன்னி மகிழ்வன நீடேர்ப் பதியினிற் சென்றுநீ யணைந்து. (கக)

வெண்டர ளங்கள் முகந்தலை யெறிந்து விளங்கிய கா விரி நாப்பண், அண்டர்கள் போற்றுங் கங்கையுந் துதிக்கு மாநந்த தீர்த்தத்தின் மூழ்கி, வண்டின முரல மலர்ந்தசெங் கழுநீர் வாவிநன் னீரினும் படிந்தே, யெண்டிசை பணியுஞ் சைகத வடிவா மிலிங்கத்தி னுளமிக விருத்தி. (கஉ)

சிந்தையுட் களித்து மகாசிவ பூசை செய்முறை வழா மலே யியற்றிப், பைந்தழை வில்வப் பத்திரக் கிளையாற் பரி வுட னருச்சனை புரிந்தாற், கந்தமார் கயிலை வரையினி னின் றுங் கணங்கள்பல் கோடி சூழ்ந் தெய்த, வந்துநா மவ்வி லிங் கத்தி னிலங்கி வரம்பல வேண்டுவ தருள்வோம். (கங)

செங்கண்மால் விடைமே லேறிய பெருமான் திருவுள மிரங்கிய வண்ணம், அங்கணித் தருளி னுரைத்திடு வாய்மை யனைத்தையு மனத்தினு ளமைத்துத், துங்கமா மேருக் கொடு முடி யிழிந்து துலங்குமா காளமே முதலாம், புங்கமார் தலங் கள் யாவையும் போற்றிப் புநிதநீ டேரினிற் போந்தான். (கச)

வேறு.

ஒப்பரிய வாநந்த தீர்த்தத்தி னுறமூழ்கி
செப்பரிய செங்கழுநீ ரோடையினிற் சென்றுபடி

மெய்ப்புகழ்சேர் திருக்கோயில் விதிமுறையால் வலம்வந்து,
முப்பொருளா கியசிகத லிங்கத்தை முறைபணிந்தே. (௬௫)

அங்கணற்கு வடபாலிற் றிருக்குளமொன் றமைத்ததனுட்
கங்கைநரு மதைவாணி காளிந்தி முதல் நதியும்
பொங்கியபுட் கரணிமுதற் புநிததீர்த் தமுமிருந்த
மங்களமா னதவாவி யாதியா கியமடுவும். (௬௬)

சிந்தைதனில் நினைத்தபடி யவையெல்லாந் திரண்டுமுன்
னே, வந்துகுதி கொண்டுதிருக் குளநிறைய மனமகிழ்ந்து,
கந்தமுறு தாமரைக்கு நாயகனுங் கதிர்க்கிறைவன், தந்திர
மா நற்றினத்திற் சங்கற்பஞ் செய்துபின்னர். (௬௭)

தூயதிருக் குளம்படிந்து சுயம்புவாய்த் தோன்றியதோ,
ராயசைக தலிங்கத் தடியிணையை மிகப்போற்றி, நேய
மிக வில்வதள நியமமுட னர்ச்சித்துப், பாயசமே யாதியநி
வேதனங்கள் பலவமைத்து. (௬௮)

துலங்குமணித் தூபமுதற் சோடசமா முபசாரம், நலங்
கனிய வினிதாற்றி நாதன்பூ சனைபுரிந்தான், பொலங்கு
ழைச்செந் துவர்க்கனிவாய்ப் பூங்கொடியோர் புடைதோ
ன்றி, யிலங்கியசை கதலிங்கத் திடைமிசையே தோன்றினர்.

வேறு.

தோன்றிடு மிடபம் வெள்ளியங் கிரிபோற் றுலங்கிடு
மதன்மிசைச் சுடர்போல், ஆன்றசெம் பவள வரையெனு
வோர்பா லழகிய பசுங்கொடி யமைந்து, கான்றதண் கதிரின்
பிறைமுடி தயங்கக் கருமணி விடமிட றிலங்க, மூன்றுகண்
களினு மருள்சுரந் தொழுக முத்தலை வேற்படை விளங்க. ()

ஆயிரங் கோடி கிரணம்விட் டெறிக்கு மாதவ ரளப்
பில ரொன்றாய், மாயிரு ஞாலம் விளக்குவா னுதித்த வண்ண

மொத் தெழுகொளி பரப்பி, சேயபே ருருவிற் பச்சை
மேயூர் பாகஞ் சிறக்கவெண் ணீற்றொளி தயங்க, பாயிருட்
கருமை மணிமிடற் றிலங்க படர்சடை பொன்னெனத்
துலங்க. (உக)

வரிப்புலி யதட்செம் பட்டுடைத் திவள மணிப்பணிக்
கச்சுமாங் கிலங்க, கரிக்கொடு முடிபொற்பணைத்தபொற் றட
ந்தோட் கெழுமுபல் பூதங்க ணெருங்க, வரிக்குரல் மிழற்
றுங் கிண்கிணி முரல வாமபா தம்பெயர்த் தாடப், புரிக்கிளை
நரம்பின் மகரயா ழிசைதும் புருவொடு நாரதர் பாட. (உஉ)

முன்னமே நின்று சேவடி தொழுத முளரிநா யகன்முக
நோக்கிப், பன்னக மென்னுங் கங்கணந் தரித்த பங்கயச் செங்
கையாற் றழுவி, யுன்னகத் தன்பும் பூசையு மிகவு முளமகி
ழ்ந் தினிதுநா முவந்தேம், என்னினி யுனக்கு வேண்டுவ
கேட்டி யியம்பிய வரமெலா மீவேம். (உங)

வேறு.

என்றிடு மீசன் வாய்மை யிளங்கதிர்ப் பரிதி கேளா
மன்றலங் கொன்றை சூடும் வரதனே யமரர்கோவே
வென்றிசேர் மழுவு மானுங் கரத்தணி விமலா செம்பொற்
குன்றவார் சிலைகுழைத்த குழகனே போற்றி போற்றி.(உச)

அருவுமா யுருவு மாகி யணுவுமாய் மலையு மாகி, மருவு
மைம் பூத மாகி மலரய னெடுமா லாகித், தெரிவரு மாயை
யாகிச் சிறந்தசிற் சொருப மாகி, யொருபரம் பொருளு மாகி
யுலகெலாம் நிறைந்தாய் போற்றி. (உரு)

பண்டைநான் மறையோன் வேதன் பாற்கடற் பள்ளி
கொள்ளும், விண்டுவா னவர்கள் பூதம் விரிகதிர்ச் சுடர்குலா
வும், எண்டிசை யளவில் காலம் எண்ணருஞ் சீவகோடி, அண்
டமோ டகன்றகோடி படைத்தளித் தழித்தாய்போற்றி. ()

மறைகளா யிரமுங் காணு மலரடிச் சேவை யென்றன், குறையெலாந் தவிரக் காட்டும் குணப்பெருங் குன்றே போற்றி, நிறையுமாநந்த கானநிர்த்தன சம்பு வேதண்ணறை யுலா மகிழ்வ னத்தில் நாதனே போற்றி யென்றே. (உ௭)

அவ்வகை தோத்தி ரஞ்செய் தழற்கதிர்ப் பரிதி சொல்வான், செவ்விய லோகா லோகஞ் சேயொளி விரித்தெஞ் ஞான்றும், இவ்வுயிர்ச் சராச ரங்கள் யாவையும் புநித மாக்கு, மைவளர் கண்ட நின்போல் வயங்குமண் டலநல் கென்றான்.

நல்கிடென் றடியிற் றாழ்ந்த நாகிளம் பரிதிக் கின்னே, பல்கிடும் வரங்கள் யாவும் பணித்திடுவென் றுமையைப் பார்க்க, மொல்குநூல் மருங்குற் செவ்வாய் ஒண்ணுத லதிக காந்தி, மல்குசீர்ப் புவன மேத்த மாசில் ஞானமுங்கொடுத்து.

சக்கர வாள வெற்புத் தாரணி விசும்பி னேடுந், திக்கெலாம் விளக்கஞ்செய்து சீவகோ டிகளைக்காத்து, முக்கதிர்ச் சுடர்க்கு நீயே முதற்கதிர்ச் சுடரே யாகி, மிக்கதே வருக்கு மேலாய் விளங்கிடென் றருளிச் செய்தாள். (௩௰)

விளங்கிடென் றருளிச் செய்த வேயுறு தோளியென்னும், இளங்கொடி யதிக ராம்பை யிமயமால் வரையின் செல்வி, யுளங்குளிர் கருணை மேனி யுமையவள் சரணம் போற்றி, களங்கணி கண்டத் தெந்தை கழலிணை பணிந்து சொல்வான். (௩௧)

பாலலோ சனனே தூய பாலொளி நீற்று யால, காலமக் காலமுண்டு கடவுளர்க் காத்தமூர்த்தி, மாலயன் தேடிக்கோடி வருடமுங்காணுப் பாதம், ஞாலமீ தெனக்கோர் நாளில் நயந்தவர் றுரைத்தியென்றான். (௩௨)

பாயெர்ளி ப்ரப்புஞ் செங்கேழ்ப் பரிதியைப் பரிவி னோக்கி, மேயவா ளரிமாதத்தில் வியன்முதற் றெய்தியான, ஞாயிறு வாரத் தேயா நந்ததிர்த் தத்தி னீரும், நீயிவண் வட பாற் றொட்ட நிறைந்தபுட் கரணி நீரும். (கூகூ)

அரியசெங் கழுநீரோடை நீரொடு மபிஷே கங்கள்
பரிவினாற் செய்து வில்வ பத்திர மெடுத்துச் சாத்தி
யுரியபூ சனைகள் செய்தா யாதலா லுவந்து னக்குத்
தெரியுமோர் பகலிற் றனே தெரிசனந் தந்தோ மென்றே. ()

வேறு.

வாசவனப் போதுவைந்து வரம்பினுடன் பணிந்தணிந்த
வாசவனப் போதுவந்து வரம்பினெனு தருளினைவர்
காசினிய மங்குறிக்கு மன்பர்மா கருணையினர்
காசினிய மங்குறிக்கு மன்பர்மா கயிலையினர். (கூரு)

வேறு.

இத்திற மியம்பிப் பின்னு மிரவிக்கன் றீசன் வில்வ
பத்திர மகிமை தன்னைப் பரிவின லுரைத்த வாறு
வித்தக முனிவர் கேண்மின் விரித்துநா முரைப்ப மென்றுச்
சுத்தசித் தாந்தம் வல்ல சூதமா முனிவன் சொல்வான். (கூசு)

ஆதித்தன் பூசைச் சருக்கம் முற்றும்

---

## 7-ஆவது வில்வச் சருக்கம்.

வான்மதியு ரிஞ்சுமணி மாடமறு கெங்கும்
நான்மறைகள் பாடிடந லங்கிளரு நீடூர்க்
கானநட ராசர்கயி லாசகிரி வாசர்
ஆனனமொ ரைந்துடைய அண்ணலரு ளோடும். (க)

நல்வனசம் வாய்விரிய நானிலம்வி ளங்க
வில்வலிய காரிருள கன்றிடவி ளக்குச்
செல்வவெயில் வீசியதி வாகரனை நோக்கி
வில்வதள மான்மியம்வி ரித்துரைவ குப்பார். (உ)

பல்லவ மனைத்துமரி பச்சைநிற மாகி
யெல்லைபெறு மூவுலகில் யாவரும் வழுத்த
நல்லதள வில்வமது நங்கணி லுதித்தே
தொல்லுலகில் வந்ததது தாயகிளை யோடும் (௩)

ஓங்கியொளிர் வில்வமட நம்முருவ மாகு
மாங்கதன்முள் யாவுநம தங்கமிகு ரோமம்
பாங்குடைய கொம்பெமது பாணியென லாகும்
நீங்கரிய முக்கிலைநம் நேத்திரங்க ளாமே. (௪)

வண்மைபெறு நந்தனவ னத்தினில மைத்துத்
தண்மைபெறு தூயபுனல் சந்ததம்வி டுத்தே
உண்மையின்வ ளர்த்தவர்கள் நம்முருவ முற்றித்
திண்மையக லாதகயி லாசவரை சேர்வார். (௫)

பொங்குகிளை வில்வமிடை பூசனைபு ரிந்தோர்
அங்கதையு ளத்தினிறை யன்பினலம் வந்தோர்
செங்கரமு கிழ்த்துமுறை சேவைபல செய்தோர்
நங்கயிலை மால்வரையி னண்ணுவர்கள் திண்ணம். (௬)

வேறு.

தோன்றும் வில்வத்தைத் தூடணஞ் செய்தவர்
ஆன்ற பாகத்துக் கல்லதத் தாருவை
யூன்ற வெட்டியு றுக்கும வர்கணம்
மூன்று கண்ணேமு னிந்தவ ராவரே. (௭)

நிரைத்த வில்வநம் நேத்திர மாமென
இரைக்கும் வேதமி தற்கடையா ளங்கே
யுரைத்த வில்வத்த ளமொரு மூன்றாந்
தரித்த கண்களு மூன்றிது தக்கதே. (௮)

முத்து மாணிக்க மொய்வயி டூரியம்
பத்தி சேர்புட்ப ராகம்ப வளங்கள்
சுத்த வச்சிரஞ் சோதிம ரகதந்
தொத்து நீலநற் கோமேத கமுமே. (௯)

தங்கப் போதுத மனியத் தாமரை
துங்கச் செண்பகந் தும்பைபைந் தாதகி
பைங்கட் செங்கழு நீர்புன்னை பாதிரி
புங்கக் கொன்றை புநிதமந் தாரையும். (௧௦)

ஓது மாதுளை யுற்பலம் பைந்துழாய்
சாதி புட்பந்த னித்தனி கோடியாய்
வேத மந்த்ர விதிதவ றுமலே
பூத லத்தில ருச்சித்துப் போற்றியே. (௧௧)

பரம பத்தர்பல் லாயிர கோடிநாள்
விரத மாய்நனைப் பூசித்த மெய்ப்பலன்
தரும வில்வத்த ளமொன்று சாத்தினோ
ரொருதி னத்தினி லெய்துவ துண்மையே. (௧௨)

கருது சித்திரை கார்த்திகை யாவணி
யிரவு திங்களின் மேவுநின் வாரத்திற்
பரவி வில்வப் பசுந்தழை சாத்தினோர்
மருவு வார்வெள்ளி மால்வரை மீதிலே. (௧௩)

இந்த வில்வத்தை யெம்முரு வாகவே
சிந்தை செய்பவர் தீவினை செய்யினும்

[illegible]
[illegible]
[illegible] நிகழ்ந்த போர்கள்
[illegible]. (கரு)

[illegible] வில்வந் தன்னை [illegible] பரிவுற்று [illegible]
[illegible] அதிக்காரி மேஷகஞ் செய்வோர்
[illegible] கோசமெய்தி பயமில்லா நந்தத் தோடும்
மகிழ்ந்திடற் கரியதான பொருளில்சா ரூபஞ் சேர்வார். (கசு)

மன்னிய வில்வந் தன்னை மணங்கமழ் கலவைச் சாந்தத்
துன்னருங் குழம்பிற் கூட்டி புனைந்தபி டேகஞ் செய்தோர்
பொன்னிநாட் டரசனென்னப் பூவுலகாண்டு பின்னுந்
தன்னிக ரில்லா ஞானந் தழைத்தசா மீபஞ் சேர்வார். (கஎ)

தாவில்சீர்ப் புதிதுவில்வத் தளத்தினைப் பரிவுய்ந்து
மேவருஞ் சோமவாரம் விளம்பிய வெள்ளிவாரம்
ஓவில்பன் மூன்றுநாளி லுறும்பிர தோடந்தன்னில்
யாவர்க ளேனுஞ்சாத்தி லெமதுசா ரூபஞ்சேர்வார். (கஅ)

அறைந்திடு வில்வந்தன்னை யட்டமி யருக்கன் றன்பா
லுறைந்துவெண் டிங்கள் சேரு முபயர்தின மற்று வாவு
நிறைந்தவா திரைநாள்மாத நிகழ்தின மிவற்றைத் தேர்ந்து
சிறந்திடச் சாத்திலப்பாற் சேர்வர்சா யுஜ்யந் தானே. (க௯)

மன்னிய மாசித் திங்கள் மருவிருட் டினபக் கத்தில்
பன்னிய் திதியின் மிக்காய்ப் பகர்ந்திடற் கரிய தாயி

சிவரா சிக்க ணுயர்ந்தவில் வத்தை நம்பாற்
டச்சாத்தி ஞேர்கள் பெறும்பயன்சொல்லற் பாற்ரே?

சொல்லிய சிவராசிக்கண் தொடங்கிய முதற்சா மத்தில்
வில்வமொன் றெமக்குச் சாத்தில் வேண்டிய வுலகை யாள்வர்
நல்வினை தருமி ரண்டாஞ் சாமத்து நயந்துசாத்தில்
வல்வினை யொழிந்து ஞான வாரிதி படிவர் மாதோ. (உக)

மொழிந்திடு மூன்றாஞ் சாம முத்தள வில்வந் தன்னை
யழிந்திடா தெடுத்து நம்பா லாதரத் தமையச் சாத்திற்
கழிந்திடும் பவத்தின் பௌவம் கருதிய நாலாஞ் சாமத்
தொழிந்திடா தினிது சாத்தி லுயர்கதி யடைவர் மன்னே. ()

உறுகிலா வில்வந் தன்னை யுரைத்தவவ் விரவி லன்பாய்
மறுவறச் சாத்தி னுலு மனமொழி மெய்த ளர்ந்து
பெறுகதி யறிவி லாமற் பிழைபடச் சாத்தி னுலும்
அறிவிலா மூட ரேனு மமரருக் கமர ராவார். (உங)

திங்களைத் திங்களேனுந் தினங்களைத் தினங்களேனுந், தங்குமெய் பகற்போதேனுந் தயங்குமெய் விருட்போதேனும், பொங்குமெக் காலமேனும் பொருந்துமுக் கிளைவில் வத்தைச், செங்கையா லெடுத்துச் சாத்திற் சிவகதி சேர்வர் மன்னே. (உச)

இலங்குமுக் கிளைவில் வத்தை யெடுத்துமுன் சாத்தினுலும், நலங்கிளர் சிலநாட்சென்று நயப்புடன் சாத்தினுலும், துலங்குமோர் மாதம் வைத்துத் தொடர்ந்துபின் சாத்தினுலும், கலங்கிடா தாறு திங்கள் கடந்தபின் சாத்தினுலும். ()

ஆண்டொன்று சென்று நம்பா லன்புடன் வில்வந் தன்னை, வேண்டும்போ தெடுத்துச் சாத்தி மீளவும் புனலிற் றோய்த்

றாப், பூண்டபே ரன்பி னோடும் பூசனைக் கருச்சித் தாலும்,
நீண்டவா னுலகை யாண்டு நிருமல வடிவ மாவார். (௨௬)

ஓர்கிளை யாலு மப்பா லுறுமிரு கிளையி னாலுஞ்
சேருமுக் கிளையி னாலுஞ் சிறந்தநாற் கிளையி னாலும்
ஆருமைங் கிளையி னாலு மமைந்தவில் வத்தைச்சாத்திற்
சார்பல னென்றுக்கொன் றுசதபடங் கதிகமாமே. (௨௭)

வெள்ளிவெண்டகட்டிற்செய்த வில்வமொன் றருச்சித்தாலுந்
தள்ளரும் பொன்னிற்செய்த தளத்தி னா லருச்சித் தாலும்
உள்ளமா னதத்தினாலே யொருமிக்க அருச்சித் தாலும்
கள்ளவிழ் தருவினீழற் கடவுட்குங் கடவு ளாவார். (௨௮)

இவ்வண்ணம் வில்வ மேன்மை யெம்பிரா னெறிக்குஞ் சோதிச், செவ்வண்ணப் பரிதி கேட்கச் செப்பிய வாறு சொன்னேன், மைவண்ணக் கண்டற் போற்றி யப்பரி பூண்ட பொற்றேர், வெவ்வண்ணக் கதிரோன் பெற்ற மேன்மையும் விளம்ப லுற்றும். (௨௯)

வில்வச் சருக்கம் முற்றும்.

---

## 8-ஆவது சூரியன் பேறு பெற்ற சருக்கம்.

விரைசெ றிந்துமென் முகிழ்வி ரிந்திட விளரி வண்டிசை முரலவே, கரைபு ரண்டிட நறவ ழிந்திடு கமல நின்றலர் வாவிசூழ், திரைசெ றிந்திடு தரள வெண்கதிர் நிலவெ ழும்படி திகழவே, நிரைசெ றிந்திடு குவளை விண்டலர் நிறைவ ளம்பெறு மகிழ்வனம். (௧)

ஏவி ரைந்தெழு வேக மென்றிரு பாலெ ழுந்தெதிர் மோதியே, தாவு தெண்டிரை வீசு நந்ததிர் தாழ்க ருங்கட லூடுபோய், மேவு தண்புன லாட கந்தரு மேன்மை தங்கிய

காவிரி, பூவிரிந்தலர் சோலை கொண்டொளிர் புநித மாகிய மகிழ்வனம். (௨)

வீதி யின்பொலன் மாட மண்டப மேடை முன்றிலு லாவியே, மாதரிங்கித நாடகஞ்செய வாது கொண்டிள மாமயில், நீடெழுங்கரு மேகபந்தியின் மேன்மு ழங்கிடு மோகையாய், றோதியென்றெதி ரேநடம்புரி சோலை தங்கிய மகிழ்வனம். (௩)

மேக மண்டல மேல்வளர்ந்தெழில் மேவும் வெண்கொடி யாடைபோர், போகும் வெம்பரி யேழ்செறிந்திடு மிரவிதேரி டைகுலவநீண், மாக மெங்கும ளாவுசெம்பொனின் மாமணி மண்டப மாளிகை, மோக மங்கையர் சேர்கழங்கெறி மூசு வண்டிமிர் மகிழ்வனம். (௪)

வாவு மந்திப லாந றுங்கனி வாழை யின்கனி வீழவே, தாவி மிஞ்சிய பூக தங்குலை சாய வந்திழி தேறல்போய், மேவு பைந்தட மூடெ ழும்மலர் வீழும் வண்டிசை பாடவே, காவி னங்குயில் கூவ வஞ்சம காந டம்புரி மகிழ்வனம். (௫)

மறையு மந்திர முறையு மந்தணர் மகமு மங்கல முரசமு, நறையு முன்றிலு மறுகு மன்றமு மணிசெய் குன்றமு மருவியாய், துறையு மெங்கணு நிறைம ணங்கமழ் சோலை துன்றும கிழ்வனத், துறையு நம்பரி ரவிமுன் றிரு வளம கிழ்ந்திட வருளினால். (௬)

வளர்பெ ரும்புவி புகழ்சி றந்தவல் விரத மொன்றவண் மருவவே, கிளர்வி சும்பிடை யொளிவி டும்பல கிரண மெங்கணும் விசிறியே, யளவி டுஞ்செய லரிய செம்பொனி னசல மொன்றினை வலமதாய், தளத ளென்றிடு கோடி கோடித யங்கு தேரிது கடவுவாய். (௭)

## வேறு.

சந்ததமும் புவிமீதிற் சராசரங்க ளனைத்தினையுந் தளரா
வெண்ணம், உந்தியசெங் கரங்களினாற் பரிசித்துப் பரிசுத்த
முதவி நம்மைச், சிந்தைதனி லனுதினமுந் தியானித்து நினைத்
தினமுஞ் சிந்தை செய்து, வந்தனைசெய் பவர்பாவ மாற்றுதி
நின் மண்டலத்தில் வாழ்வோ மென்றார். (௮)

அவ்வுரைகேட் டுளமகிழ்ந்த ஆதவன்மெய் விடை
யூர்ந்த அண்ணல் பாத, மெய்விதிர்ப்பி னுடன்வணங்கி வேண்
டும்வர மொன்றுளது விளம்பக் கேட்டி, செவ்வியஆ வணி
யினுடன் சித்திரைமா தத்தினங்க ளெல்லா மேனு, மெய்வ
மறும் வைகறையின் யான் வகுத்த திருக்குளத்தி லினிது
மூழ்கி. (௯)

புனிதமாய் வில்வதள மருச்சனைசெய் துனைப்பூசை புரி
ந்து வோர்க்குக், கனகமா மணிமுதலா வெட்டுவகைச் செல்
வமுநற் கதியு மீந்து, தினமும்வே யுறுதோளிக் காதித்யாம்
பிகையென்னுந் திருப்பே ரோங்க, வுனது திரு வருள்புரிவா
யெனஇரவி யடியிணைதாழ்ந் துரைத்துப் பின்னும். (௧௰)

வீறுகூர் மகமேரு வில்லாக விடவரா வியனாணாகக், கூறு
நால்வேதமுநாற் பரியாகக் குவலயம்பொற் கொடித்தே ராக,
நாறுநாண் மலர்க்காயா வண்ணனெடுங் கணையாக நண்ணார் தங்
கள், சிறுமூ வெயிலெரியச் சிறுமூரல் ஒளிவிரித்த தேவர்
தேவே. (௧௧)

வேலைவா யமரர்குழா மமுதுகடைந் தெடுப்பதன்முன்
வெவ்வ ராவா, யாலகா லம்பிறந்து நெடுமாலுந் திசைமுகனு
மமரர்கோவுஞ், சீலமா திரத்தவருந் தேவர்களும் வெருவியு
ளந் திகைத்து வாடிக், காலிணையில் வீழ்வதுகண் டஞ்சலென
நஞ்சருந்துங் கருணைவாழ்வே. (௧௨)

விண்ணில்வாழ் புரந்தரனுந் திசைமுகனுந் திருமாலும் விளங்கி யோங்கு, மெண்ணிலா தொளிரண்ட கோடிகளுந் தன்மைசற்று மியங்கா வண்ண, முண்மைசேர் யோகமுடன் மெய்ப்பொருள்தேர் நால்வர்க்கன் றுரைத்த போது, தண்ணறுத் துளிக்குமல ராளிபோர் விழித்தெரித்த தழற்கண்ணனே. (கங)

அவ்வரா கத்துருவா யமைந்தநெடு மால்துதியிலும் மழற்செஞ் சூட்டு, வெவ்வரா முடிக்கிடந்த பாரினிலாழ் கடல்சூழ்ந்து விளங்கி யோங்குந், தெவ்வரா லழியாத இலங்கையிரா வணன்கயிலை திண்டுங் காலே, யிவ்வரா கந்தரும்பொற் பதமலரா லடர்த்தருளு மெம்பி ரானே. (கச)

திக்களா வியசிகரத் திமையகிரி மகளாகிச் செனித்த மாது, மைக்கண்வா ணகைத்துவர்வாய் வெள்வளைப்பொற் குழைபுமையாள் மகிழ்ந்தெந் நாளு, மிக்கபா கத்துறையும் பரம்பொருளை விடையூர்ந்த விமலா வேத, முக்கணு யக முதல்வா மகிழுவனத் துதித்தெழுந்த மூவர் தேவே. (கரு)

என்றுதோத் திரங்கழுத்தி வலஞ்சூழ்ந்து நெக்குருகி யிணையி லாப்பொற், குன்றவார் சிலைமலர்க்கை யண்ணலே பரமென்று கூற வீசு, மன்றன்மா லிகைவரைபோ லிறுமாந்த புயத்திரவி மகிழ்ந்து கேட்கு, நன்றிசேர் வரமெலா மருளி யருண் மழைமேக நாட்டங் காட்டி. (கசு)

எத்தலத்து மிக்கமகிழ் வனந்தனில்வே யுறுதோளி யிடமாய்க் கான, நிர்த்தனசங் கரரிருப்ப வாயிரவே ரந்திகழ்பொன் னெடுந்தே ரேறிச், சித்தமகிழ்ந் தவர்பாதந் தியானித்து மேருவலஞ் செய்து நாளும், உத்தமமாம் பரப்பிரம வுருவாகி யிரவியும்விண் ணூற்றுன் மன்னே. (கஎ)

இந்தமகிழ் வனத்திலெய்திச் சூரியபுட் கரணிபடிந்
தீசர்ப் போற்றி, வந்தருளு மொருமறையோர்க் கிரவிதினத்
தனதானம் வழங்கி னோர்கள், நந்ததிரேழ் கடலுடுத்த
நானிலமெ லாம்புரந்தெந் நாளும் வாழ்ந்து, சுந்தரஞ்சேர்
கபிலைவெற்பிற் சிவவடிவா யிருப்பரெனச் சுருதிசொல்லும்.

பூதானந் திலதானங் கன்னிகா தானநிறை பூரி தானங்,
கோதான முபநயன தானமொடுத் தமதானங் கோதி லாத,
மாதான மிவையெல்லா மறையோர்க்கு விதிமுறையின்
வழங்கினோர்கள், வேதானந் தத்தனிவீட் டிருப்பரென
வுபநிடதம் விளம்பு மாதோ. (க௯)

மங்குறவழ் மகிழ்வனமா நீடூரி லதிகாந்தி மங்கைபாகர்,
பொங்கரவம் புனைவேணிக் கானநிர்த்த சங்கரரைப் பூசை
செய்து, வெங்கதிரோன் பேறுபெற்ற காதையினை விரித்து
ரைத்தீர் விமலர்ப் போற்றித், திங்கள்பெறும் பேறுரைத்தி
ரெனச்சூத மாமுநிவன் சிறப்பிற் சொல்வான். (உ௰)

சூரியன் பேறுபெற்ற சருக்கம் முற்றும்.

---

## 9-ஆவது சந்திரன் பூசைச் சருக்கம்.

தேனூறும் பொழில்புடைசூழ் நீடூரிற் சிறந்திருக்குஞ்
செல்வர் மாதெங், கானூறு மலர்க்கொன்றை கமழ்சடையார்
மழவிடையார் கமல பாதம், வானூறு மமுதகதிர்ச் சந்திரன்
பூசனைபுரிந்த மகிமை தன்னை, யானூறு பவமொழிய இயம்
பிடுவ னருந்தவரே யினிது கேண்மின். (க)

சுந்தரஞ்சேர் பாற்கடலை வானவருந் தானவருஞ் சூழ்ந்
து முன்னாள், மந்தரஞ்சேர் மத்தாக வாசுகியே தாம்பாக
வளையாய் நின்று, தந்திரஞ்சேர் வினைப்பயனா லமுதம் வரக்

கடைந்திடுமேத் தருணாந் தன்னி, லந்தரஞ்சேர் வெண்கதிரோ
னிருளகற்ற வந்துதித்தா னங்கண் மன்னே. (உ)

கரையெறியும் வாலுகம்பொற் சங்கெறியும் வெண்டர
ளம் கலந்தெஞ் ஞான்றுந், திரையெறியும் பாற்கடலில் வந்
துதித்த இமகரனத் திங்கட் செல்வன், விரையெறியு மலர்க்
கொன்றை வேணியனைக் கருத்திருத்தி வேறொப் பில்லா,
வரையெறியு நெடுஞ்சிகர மந்தரத்தி லருந்தவங்கள் வருந்திச்
செய்தான். (ஙு)

செய்தபெருந் தவப்பயனு லரிபிரமர் தேடரிய தேவர்
கோமான், மைதவழுங் கறைமிடற்று மான்மழுவும் புயநான்கு
மலர்க்கண் மூன்று, மெய்தழைவெண் ணீற்றொளியுஞ்
செஞ்சடையும் பச்சைமயில் விளங்கோர் பாலும், நெய்தகு
சூ லப்படையு மழுகொழுக மழவிடைமேல் நேரே தோன்றி.

ஆழ்கடலி னடுவிருந்த மந்தரத்தி லருந்தவம நேகஞ்
செய்தே, தாழ்விலா தெமைப்போற்றுந் தகைமையினல் மன
மகிழ்ந்தேம் தருவ ரங்கள், கேழ்கிளர்வெண் ணிலவெறித்
தெண் டிசைவிளக்குஞ் சந்திரநீ கேட்பா யென்ன, வூழ்வினை
தீர்த் தனதுசா ரூபமரு ளெனவிமல னுரைப்பான் பின்னும்.

நீவினவும் வரமனைத்துந் தருவதனுக் கேற்றதல நிகழ்
த்தக் கேளாய், பூவிரியு மடல்தோறு மூவட்டெறிசெந்
தேன்கமழும் பொதும்பர் தோறுங், கூவுகருங் குயிலார்ப்பத்
தூவியனப் பெடையாடுங் குளிர்நன் னீரில், வாவுகய வினம்
பிறழும் வளைமணியால் மடற்குவளை மலர்வாய் விள்ளும். ()

வியன்மேக மண்டலத்தி னூடுசெலும் பைந்தருவின்விரி
பூங்கொம்பர், அயன்மேவுங் கிள்ளையினம் வெள்ளைமதிப்
பிள்ளைநிலா வமுதபானத், தியன்மேவு மழலைமொழி பேசி

யருங் கிளையதனை யீட்டஞ் செய்யுஞ், செயன்மேவு தண்
ணறுக் கொழிக்குமலர் மலர்ந்தெங்குஞ் சிறக்கு மாதோ. (எ)

வானமழை தனக்கிரங்கித் தளராமற் பெய்யுமந்த வண்
மை கண்டு, தேனொழுகு மலர்த்தருக்கள் மலர்ந்துகாய்த் தரி
யகனித் திரளி னோங்கிக், கூனமதி தவழ்விசும்பிற் சினைக்
கரத்தா லெடுத்தேந்துங் கொள்கைத் தென்ன, வூனமிலாத்
திசையளவுங் கொம்பர்விரித் தும்பர்மிசை யோங்கு மாதோ.

நடந்தோறுந் திரைதோறுங் கரைதோறுந் தத்துகயல்
தாவி வானி, லடர்ந்தேறிச் சுடர்விரிக்குந் தாரகையைத் தன்
னினமென் றளவ ளாவித், திடந்தேறி யவையினங்க ளன்
மையினால் வண்மையுடன் றிரும்பிப் பாய்ந்து, படர்ந்தேறு
முடப்பலவின் குடக்கனிக ளுடைத்திடாம் பருவச்சோலை.

அந்தமலர்ச் சோலைதிக ழணிகொடிரை வாவியினீ ராடி
விண்ணோர், முந்துபெருந் தவத்தவர்க ளிருங்கதியை
வேண்டிமல மூன்று நீக்கிச், சிந்தையிலா நந்தமிகப் பெருகிய
பேருவகையெனுந் தேறல் மாந்திச், சந்ததமு நீங்காமற்
றவம்புரியு மகிழுவனத் தலமொன் றுண்டால். (ய)

அம்மகிழ வனத்தேகிச் செங்கழுநீ ரோடைபடிந் தத
னுட் டோன்றுஞ், செம்மலர்ப்பூங் குவளையுட னெட்டிதழ்த்
தா மரைமலருஞ் சிறப்பாய்க் கொய்து, நம்மிதய மகிழ்வுறவெந்
தினியபூ சனைபுரிதி நாம்வந் தப்பால், மெய்ம்மைதிகழ் வரம
னைத்துந் தருதுமெனக் கருணையுடன் விளம்பிப் பின்னும். ()

கற்பகநன் னிழலிருக்கு மிந்திரனே முதலாய கடவு
ளோர்க்கு, நற்பதும முகைவிரிக்க வெயில்விரிக்குந் தினகர
ற்கு நாமுன் னளிற், பற்பலநல் வரங்கொடுத்தேம் நீயுமந்த
நீடூராம் பதியி லேகி, யற்புதமா யவ்வண்ண மருச்சித்தால்
வேண்டும்வர மருளிச் செய்வோம். (கஉ)

## வேறு.

என்று முக்க ணிறைவ னியம்பலுங்
குன்ற விற்கைக் குழகனைப் போற்றியே
நன்றி தாமென நாடி யிமகரன்
மன்றல் வீர மகிழ்வனஞ் சார்ந்தனன். (கங)

அங்குக் காவிரி யாநந்த தீர்த்தத்தின்
துங்கச் செங்கழு நீர்மலி தோய்ந்தருஞ்
சங்கற் பத்தொடு தானங்கள் செய்தபின்
எங்கட் கீசன் சினகரத் தெய்தியே. (கச)

தத்து நீர்மலி சந்திர தீர்த்தமொன்
றத்த லத்தி லமைத்ததின் மூழ்கியே
மொய்த்த செங்கழு நீரு முளரியுங்
கைத்த லத்தி லெடுத்துக் கருத்துடன். (கரு)

புரியும் பூசைக்கு வேண்டும் பொருளெலாந்
தெரிய வெற்றிச் சிகதலிங் கத்தினிற்
பரிவு மன்புமெய்ப் பத்தியு மோங்கிட
அரிய பூசை யருச்சனை யாற்றினன். (கசா)

அன்ன தன்மை யனைத்துந் திருவுளத்
துன்னி வேயுறு தோளுமை யாளொடு
முன்னொ ரேற்றின் முழுமுத லெய்தலும்
மன்னு சந்திரன் வாழ்த்தி வணங்கியே. (கஎ)

தோடுக டற்கண் டுயிலரி வாசவன்
விடும டற்கம லாசனன் விண்ணுளோர்
முடுகி யோட வெழுந்த முழுக்கொலைக்
கடுநு கர்ந்தெமைக் காத்தருள் மூர்த்தியே. (கஅ)

என்று மேதொழு தேத்தும் பதஞ்சலி
வென்றி சேரும் வியாக்கிர பாதர்க்கா
அன்று மாலு மயனும் பரவப்பொன்
மன்று ளாடிய மாணிக்க மேருவே. (ககூ)

மாதர் வல்லி வணங்கிய நாலிடை
மாதர் வல்லி வணங்கிய நாலிடை
யாத ரஞ்செறி யம்பணி யாளனே
யாத ரஞ்செறி யம்பணி யாளனே. (உ0)

ஆர மாமுலை யாரர சாகிய
ஆர மாமுலை யாளொரு பாகனே
ஆர மாமுலை யாரடி தேடிய
வார மாமுலை யாவரை மார்பனே. (உக)

என்ன வேதொழு தேத்திய சந்திரன்
தன்னை நோக்கி மகிழ்வனத் தற்பரன்
உன்னு ளத்தன் புவந்தன நல்குவேம்
துன்னு நல்வரங் கேளென்று சொல்லவே. (உஉ)

ஓது கின்றசா ரூபமு வந்தெனக்
கீதல் வேண்டு மெனமதி கேட்டலு
மாது பங்கன்ம கிழ்ந்தருள் செய்தொரு
மேத கும்பொன் விமானத்தி லேறியே. (உங)

இரவெ லாகின் னிலங்குங் கரங்களாற்
றரணி மிக்க சராசர மெங்கணும்
விரவி யென்றும் விளக்குதி யென்னவே
வரம ளித்தனன் மங்கையொர் பங்கினன். (உச)

காம வேளை நுதற்கணிற் காய்ந்தரு
ளேம வேணி மகிழ்வனத் தெந்தையார்

தாமம் வீசிய சந்திரன் பூசையாற்
சோம நாத ரெனப்பெயர் சூடினார். (உரு)

ஈச னல்கு விமானத்தி லேறியே
மாசி லாதவிண் மண்டலத் தெய்தியே
தேசி ராவிற் செலுத்திப் பகலெலாங்
காசில் செங்கதி ரோடுங் கலந்தனன். (உசு)

அரிய அத்தலந் தன்னி லணுகியே
உரிய சந்திர வோடையின் மூழ்கிவாய்
விரிசெ ழுங்கழு நீரின் விமலனைப்
பரிவி னோடு மருச்சனை பண்ணுவார். (உஎ)

யாவ ரேனு மெழுகடல் சூழுமிப்
பூவெ லாமர செய்திப் புரந்தபின்
மூவ ருக்கு முதற்பொரு ளாகிய
தேவ தேவன் திருவடி சேர்வரே. (உஅ)

கொந்து லாவும கிழ்வனைக் கூத்தனை
யிந்து பூசித்த காதையி யம்பினேன்
முந்து ஞானமு நிவர ரேரெண்டு
வந்து பூசித்த வாறுவ ழுத்துவாம். (உகூ)

சந்திரன் பூசைச் சருக்கம் முற்றும்.

## 10-ஆவது அலவன் பூசைச் சருக்கம்.

மருவிருக்கு மலர்ப்பொழில்சூழ் நீடூரி லதிகாந்தி வாம பாகர், திருவிருக்கு நெடுமாலுந் திசைமுகனும் வானவருந் தேடிக் காணு, வுருவிருக்குந் தழற்சோதி பாடியா டியகடவு ளுயர்கல் லாலந், தருவிருக்குந் தனிமுதலை யெண்டுபூ சித்த கதை சாற்று வேனால். (க)

பூவுலகிற் சிறப்பாகி யறத்தினிலே தவறுமற் புநித மா
கித், தாவில்பெரும் புகழ்படைத்துத் தவமுநிவர் வேதியர்
கள் தழைத்து வாழும், தேவர்குழா மிகநெருங்கி யநுதின
முஞ் சிவபூசை சிறப்பாய்ச் செய்து, மூவுலகுங் கொண்டா
டப் பெருவேள்வி முடித்துமறை முழக்க மோங்கும். (௨)

விரைசெறியும் பூம்புகட்டு நெட்டிதழ்த்தா மரைமுறு
க்கு விண்டு செந்தேன், திரைசெறியும் நீர்த்தடத்திற் குட
வளைவெண் மணிவிரிக்குந் தெண்ணி லாவெண், ணிரைசெ
றிய வான்முகட்டி லுதித்தெழுந்த தவளநிலா நிறைக்குந்
திங்கட், புரையுமெனக் கருங்குவளை செங்குமுதம் வெண்
குமுதம் பொதிவாய் விள்ளும். (௩)

கார்படிந்து முழக்கமிடச் சந்தனு டவிப்பொதும்பர் கமழ்
பூங் கொம்ப, ரேர்படிந்து தலையசைக்கச் சுரும்பினங்
கள் வண்டினொடு மிசைகள் பாட, நீர்படிந்த பூந்தடத்துத்
தெண்டிரைகள் முழவிமிழொலி நிரப்ப நீடு, சீர்படிந்த
தோகைமயி னடனமிடும் வளம்பொருந்திச் சிறக்கு மாதோ.

ஆயிரஞ்செங் கதிர்பரப்பிக் குணதிசையி னுதயகிரி யத
னிற் றோன்றி, மாயிருஞா லம்பொதிந்த அந்தகா ரப்படல
வரைப்பை நீக்கி, மேயபெரும் புகழ்படைத்த வொற்றையா
ழியந்தேரோன் வெயில்வீ சாமல், ஆயவிம படம்போர்த்த
வதிசயமொன் றுறுதிங்க ளமைந்து நீடும். (௫)

கூறுசிவ கேதார கேத்திரத்தில் மறையோர்தங் குலத்
திற் றோன்றி, வீறுபெறு சதுர்வேத வித்தாகி யிருந்துமதி
விடனு மென்ன, வூறுபடு பாதகமுங் காதகமு முளுற்றி
னன்பே ருரைக்குங் காலை, மாறுபடு கின்றதன்ம சுத
னென்போன் லரன்முறைமை வழுவி யாங்கே. (௬)

அறுசுவையுண் டியின்வேட்கை நித்தமுந்தென் புலத்
தவரூணயின்றும் நன்மை, யுறுபெரியோர் தமையிகழ்ந்
தும் பரத்துரோ கம்புரிந்து முயர்சந்யாசி, மறுவறுவே டந்
தரித்து மன்னவர்தம் மாச்சிரம மடங்க டோறுங், குறுகி
யவர் கமண்டலமுந் துவர்க்கலையுந் தினந்திருடிக் கொள்ளை
கொண்டும். (எ)

சண்டாள வடிவெடுத்துக் கேதாரத் திருக்கோயில் தன்னி
லேகி, யுண்டாய வடிவிலெலாங் கவர்ந்துண்டு மிழிந்தமது
வுடனூ னுண்டுங், கண்டாரெ லாமிகழ வேதியர்கள் மனை
தோறுங் கன்னமிட்டுக், கொண்டாடை நவநிதியுந் திருடி
விலை மடந்தையர்க்குக் கொடுத்து மப்பால். (அ)

துஞ்சுகுல மங்கையரைக் கற்பழித்துஞ் சொற்பழிக்குத்
துணிந்தும் பாவ, மிஞ்சியொரு மூன்றுண்டு கைக்கோள
விலைமாதை விருப்பி னல்வைத், தஞ்சுதலி லாதுமதுக்குடித்
தானுண் டுழல்வதுகண் டரசன் சீறிச், சஞ்சரியா வண்ண
மதி முறைதெரிந்தத் தலங்கடக்கத் தள்ள லோடும். (௯)

வீறுபுகழ்க் காசிசென்றும் வேதியர்தம் மனைபுகுந்து
வியன்பொன் னுடை, கூறையிவை தினந்திருடி வேசியர்க்கு
நாடோறுங் கொடுத்தும் வாளா, தூறுசொலு மஞ்ஞான
விடருடன்கூ டித்திரிந்துந் தூது சென்றும், நாறு புலால்
மதுபானம் விலைமாதர் மனைதோறும் நண்ணி யுண்டும். (௰)

கானகத்தில் வழிப்பறிகள் பறித்துண்டும் வேடருடன்
கையில் வேலேந்தி, மானொடு வராகமுயல் கொன்றுதின்று மவரு
டனே வருட மூன்றங், கீனமுடன் சஞ்சரித்தும் பிரமகத்தி
செய்துபொரு ளெடுத்து மீசர்க், கானதிர வியங்கவர்ந்துங்
கொடும்பாவம் பலநாட்செய் தலைந்து மப்பால். (௧௧)

ஊழ்வினையால் வேணீசர் சந்நிதியிற் பிரயாகை யுயர்தீ
ரத்தி, லாழ்புனலிற் றிருவேணி சங்கமத்தில் மாகமதி யத
னிற் றாழ்ந்து, மூழ்கியடுங் குளிராலே யுடலினைவிட் டுயிர
கல முதற்றான் செய்த, தாழ்வில்கொடும் பவமிழுக்கச்
சொல்லரிய பெருநிரயந் தன்னில் வீழ்ந்தான். (கஉ)

வீழ்ந்துபல நாள்நரகத் தநுபவித்த தன்மசுதன் மீண்டு
மிக்கா, யாழ்ந்தபெருந் தவக்கடலைக் கரைகடந்து மும்மலமு
மகற்றி ஞானஞ், சூழ்ந்தபெருங் கருணையினை யீசுரரை
வாதித்துந் துகிலுந் தெண்ணீர், தாழ்ந்தபெருங் கமண்டல
முந் துவர்க்கலையுந் தினங்கவர்ந்த தன்மை யாலே. (கங)

உந்துபழ வினைத்தொடர்ச்சி துரந்திழுக்கத் தடங்
கடல்சூ ழுலகின் வெம்மைச், சந்ததமு மகலாத கொடுந்தழ
லின் வடிவாகிச் சால நீடு, விந்தநெடுங் கிரிச்சார்பின் வியன்
மரங்கள் சிறிதுமின்றி மேவு நாகம், பைந்தழல்வெம் புரியா
கிப் பதைபதைக்குங் கொடும்பாலைப் பரப்பிற் றோன்றி. ()

நீண்டஇருள் வடிவாகிச் செந்நிறத்த குஞ்சியுமாய் நில
வக் கோட்டிக், காண்டொறுங்காண் டொறும்வெருவ விதழ
துக்குங் கடையெயிறுங் கனல்போற் கண்ணும், கூண்ட
துணை நாசிகையிற் கொழும்புகையின் படல்பிழம்பக் கொலை
யின் செய்கை, பூண்டவிராக் கதனாகச் சென்மித்தான்
திரைக்கடல்சூழ் புவியோ ரஞ்ச. (கரு)

பொல்லாத புலைத்தொழிலுங் கொலைத்தொழிலு நா
டோறும் புரிந்து பாரி, னல்லோர்க ளுளநடுங்கிப் பாதகமோ
ருருவாக நண்ணிற் றென்ன, எல்லாரு மிகழ்ந்துரைப்ப விலங்
கினொடு பறவைகளு மிரங்கி யோட, வொல்லாது சஞ்சரித்
துக் கொடும்பாலை நிலங்கடொறு முலவிப் பின்னும். (கசு)

தூங்குநெடு நாக்கோடுந் துடிதுடித்துக் கொடும்பசியின் சுடுதீமண்ட, வோங்குநெடுங் கானகத்தி லிருபத்தைந் தாண்டலைந்து முணவொன் றின்றித், தாங்கலுற கிச்சிறந்த நருமதையா நதிதீரந் தன்னி லோர்நாள், தீங்ககலும் வாணீசர் சந்நிதியிற் றெய்வகதிச் செயலால் வந்தான். (கஎ)

சேர்ந்துமுன மிருநான்காஞ் செனனத்திற் சிவபூசை செய்தபேறு, கூர்ந்ததவ மங்கன நாரதமுநியைக் கண்டிருகை கூப்பிச் சொல்வான், வார்ந்தசடை முநிவரர்சிந் தாமணியே திருக்கருணை வடிவே யென்ற, ளூர்ந்ததுயர்க் கடலினுக் கோர் புணையேயென் றென்றுதுதித் தடியில் வீழ்ந்தே. ()

வினவுதியான் முற்பவத்தின் தன்மசுதன் எனும்பேரான் வேதமென்னுங், கனைகடலைக் கரைகண்டேன் கரைகாணுப் பாதகஞ்செய் கருமந் தன்னாற், சனமனைத்து நடுநடுங்க இராக்கதனுய்ச் சனித்தேனெத் தவமோ வுன்றன், வனசமலர்ப் பதங்கண்டேன் கரையேறும் வகைதெரிந்து வழுத்து கென்ன. (கஅ)

அவ்வுரைகேட் டருந்தவனும் நாரதமா முநியவனுக் கருளிச் சொல்வான், வெவ்வினையி ராக்கதனுய்ச் சென்மித்தா யெதிகள்துகில் வேற்றோர் சோமன், வவ்வியுறு பாதகத்தா லுழன்றனையப் பவமொழிந்தாய் வந்திங் கெம்மைச், செவ்விதிற்கண் டதனிற் கின்னமொரு பிறப்புளது செப்பக் கேட்டி. (உ0)

கன்னமிட்டுப் பொருள்கவர்ந்துந் துறவிகள்கற் றோர் கலிங்கங் கவர்ந்தும் பாவம், இன்னமட்டென் றுரைக்கரிதாய்ச் செய்ததனல் ஞெண்டுருவா யெடுப்பாய் சென்மம், முன்னமைத்த சிவபூசைப் பலத்தாலித் தலத்தில் வந்தாய் முதல்

வா ணேசர், சன்னிதிக்க ணருமறையி லொருகண்ணீ யமிழ்ந் திடிலிச் சனனந் தீரும். (உக)

பூதலத்தில் மிக்கான காவிரிக்கும் வடகரையாம் புநித நீடூர், மாதலத்தி லாநந்த தீர்த்தமடு வினிலலவன் வடிவாய்த் தோன்றிக், காதலுடன் கானநிர்த்த சங்கரரைப் பூசைசெய் யக் கருதி யாங்கே, மேதகுமல் வனத்திலுறு பன்மலரால் வெள்ளெருக்கின் வியன்பூ வொன்றால். (உஉ)

மறைபகர்ச டாக்கரத்தா லருச்சனைசெய் பூருவத்தில் மழுமா னேந்தும், இறையுரைத்த சிவபூசை யெட்டுவித மு ளதெனவு மியம்பு நீரோடாய்க், கறைதவிருஞ் செங்கழுநீ ரோ டையுடன் சூரியபுட் கரணி வாச, நிறைதருநீர்ச் சந்திரபுட் கரணிபடிந் தநுதினமும் நியமத் தோடும். (உங)

மேலுலகத் திமையோருங் கயிலைபல வெனமருள விசு ம்பி னோங்கும், வாலுகஞ்சேர் மகிழ்வனத்திற் சிகதலிங்கந் தனையொருநீ மகிழ்ச்சி கூர்ந்து, நாலுலட்ச சதகூவா யிரத்திருநூ றுண்டுமெல்லால் நற்கி ரேதச், சீலயுகத் தந்தத்தா யிரவருடம் பூசைபுரி சிறப்பி னோடும். (உச)

நீயியற்று சிவபூசைப் பலனுற்கற் கடசென்ம நீங்கி யந்தத், தூயமகிழ் வனத்திலுயர் சிவசாரூப் பியமடைவாய் சொன்னே னென்ன, ஆயவநுக் கிரகமது கைவீணை யின்னி சையி னமுதஞ் சோரக், காயமுழு நிலவெறிக்க வம்முநி வன் திருச்சயிலங் கண்ணுற் றனே. (உரு)

அந்தவுரை கேட்டகல்வாய்ப் பிறையெயிற்றுச் சுழல் விழிக்கா ரரக்க னங்கே, முந்துறுவா ணேசர்திருச் சந்நிதியி னருமறையா முழுப்பே ராற்றிற், சிந்தனையெல் லாமடக்கி

யொருகணப்போ தமிழ்ந்திருந்தான் சிவன்தன் மாய, முந்தி டவக்கோரவடி வானநிசா சரசனன மொழிந்தான் மன்னே.

வேறு.

அன்ன காவிரி யாநந்த தீர்த்தத்தில்
மன்னு பொன்னிற மாய்வெள்ளை யிற்றொடு
துன்னு கால்கறை நீண்டொது லங்கிட
நன்னி லம்புகழ் ஞானனொண் டாகியே. (உஎ)

நித்த மாநந்த நீரினிற் சங்கற்பச்
சித்தி தன்னொடுந் தானங்கள் செய்தபின்
புத்தி யிற்றொடர் பூருவ வாசனைப்
பத்தி யால்மறை மந்திரம் பன்னியே. (உஅ)

வேறு.

நிரைத்தபசுந் தருப்பையினாற் பவித்திரங்கை தரித்த தற்பி னெறிவ ழாமல், விரித்ததிவ்ய பரிமளவி பூதிதனை யதருவண வேதந் தன்னி, லுரைத்தவுப நிடதமீ சானாதி யைந்துமந்தி ரத்தி னோடு, தெரித்தசடாக்ஷரமோதித் தேக மெங்கு முத்தூள னந்தான் செய்தே. (உகூ)

மிக்கதிரி புண்டரங்கள் தானங்கள் பதினெட்டின் விரு ப்பாய்ச் சாத்தி, அக்குமணி வடமணிந்தா றக்கரமந் திரமு றையா லமல மாகுந், தக்கபரம் பொருளாகித் தழற்பிழம் பா யோங்குமருட் சம்பு வான, முக்கணனை யுளத்திருத்தி நாரதமா முநியுரைத்த முறையை யோர்ந்து. (ஙுய)

அரியசிவ பூசைசெய வேண்டுபொரு ளத்தனையு மமை த்து வேதத், தூரியசிவா கமமுரைத்த விதிமுறையிற் றவ ருமெலொழுகு தீம்பால், விரியுநறு மணங்கமழு முக்கனிசெந்

தேனிளநீர் வெள்ளை முத்தஞ், சொரியுமுழுக் கன்னலந்தீஞ்
சாறுசெழுந் தயிர்புதுநெய் சுத்த நன்னீர். (௩௧)

அன்னநறுந் தும்பைமலர் முதலாய திரவியங்க ளனைத்
துஞ் சேர்த்துப், பொன்னவிர்செஞ் சடைமவுலி மகிழுவனத்
துறைந்தருளும் புநிதர்க் கன்பாய்ச், சொன்னமுறை
பிறழாம லபிடேகஞ் செய்துசெம்பொற் றுகிலுஞ் சாத்தி,
மின்னியபன் மணிக்கலங்கள் புனைந்துபசுங் கொன்றையந்தார்
வேய்ந்து பின்னும். (௩௨)

முக்கிளைவில் வத்தளமுஞ் செங்கழுநீர் மலருநறு முள
ரிப் போதும், தக்கமகிழ் வனப்போதுஞ் சண்பகநாண் மலரு
மிளந் தளவும் வேரி, கக்குமுகிழ் விரியாத கரவீரச் செழும்
போதுங் கலந்து சூட்டி, அக்கதைபு மணிந்துமறு வில்லாத
பசுந்தளிர்நெட் டறுகுஞ் சாத்தி. (௩௩)

திகழுமணித் தூபமுதற் சோடசமா முபசாரஞ் சிறப்
பாய்ச் செய்து, புகழூநறும் போனகமுஞ் செழும்பாலு மிளந்
தயிரும் புதிய நெய்யும், மிகவுமது ரம்பழுத்த வாழைநறுங்
கனியுமணம் விரிதே மாவின், தகுமினிய கனியுமுது வருக்
கைபிளங் கனியுநிவே தனஞ்செய் தப்பால். (௩௪)

வேறு.

மலைவி லாதவ வாசவ னேசனே
மலைவி லாதவ வாசவ நேசனே
கலைநி லாமதிக் கண்ணிய லார்தொழுங்
கலைநி லாமதிக் கண்ணிய ஞதியே. (௩௫)

ஆயி ரங்கதி ராதவன் போற்றிய
தூய வேயுறு தோளுமை யாகிய

தாயொர் பாகத் தமைந்தருள் சண்முகச்
சேயை யீன்றருள் தேவர்கள் தேவனே. (௩௬)

தண்ணி லாவுமிழ் சந்திரன் பூசைசெய்
வெண்ணி லாவுமிழ் வெள்விடை யூர்தியே
யெண்ணி லாதவ ரென்ன விளங்கிய
வுண்ணி லாவு மொருதனி மூர்த்தியே. (௩௭)

வான கத்துறை வாசவன் பூசையால்
ஞான சித்தி நடத்தரு பூதியாய்த்
தேன்ம லர்ச்செழுஞ் செஞ்சடை யாடிடக்
கான நிர்த்தனஞ் செய்தமுக் கண்ணனே. (௩௮)

பாச மேவும் பறவையின் பார்ப்பினை
யேசில் வாயிரை யாய்ப்பருந் தீர்த்திடக்
காசில் வாவியிற் கண்டுப தேசிக்கும்
வாசம் வீசு மகிழ்வன நாதனே. (௩௯)

அக்கு மாலை யணிந்த சடாடவிச்
செக்கர் மேனி திமிர்ந்தவெண் பூதியாய்
மைக்க ளத்து மறைமுத லேதடக்
கைக்க ளிற்றுரி போர்த்த கடவுளே. (௪௰)

கலைகு ழைக்குங் கருத்துடை யார்தொழுஞ்
சிலைகு ழைக்குந் திருநுதற் கொம்பனாள்
மலைகு ழைக்கு மணிமகு டத்தினை
முலைகு ழைக்கு முழுமணி மார்பனே. (௪௧)

பூவும் வாசமும் போலுல கெங்கணும்
மேவு ஞான விளக்கொளி யேயெம
தாவி போலு மருட்கட லேபுயர்
தேவர் போற்றிய செம்பொருளின் மேருவே. (௪௨)

தொண்டு கொண்டு துதித்தடி யேனெனக்
கண்டு கொண்டு கருத்தி லிருத்தியே
வண்டு கிண்டு மலர்க்கம லாசனன்
பண்டு விண்டு பராவிய நாதனே. (சஙூ)

விருப்புஞ் சீர்மையும் வேண்டியெக் காலமுந்
தருப்பொன் னாட்டவர் தாழ்ந்தடி போற்றிய
மருப்பைங் கூந்தல் மடக்கொடி பாகமாய்த்
திருப்புன் கூரிற் சிறந்தருள் தேவனே. (சச)

குங்கு மத்தடங் கொங்கைக் குவட்டுநீள்
செங்க யற்கட் சிலைநுதற் செய்யவாய்
மங்க லப்பங் கயப்பொன் வளைக்கையார்
தங்க ளிச்சைப் பலிகவர் சம்புவே. (சரு)

புக்க வானவன் பூரண மாமதி
மிக்க வானவர் மேல்வெருண் டோடிட
முக்கண் மீதினு மூட்டுசெந் தீயுகத்
தக்கன் வேள்வி தடிந்தருள் சம்புவே. (சசா)

வென்றி வேளை நுதற்கண் விழித்தெரித்
தன்று காய்ந்த அருட்கட லேகுணக்
குன்ற மேநற் கொழுங்கனி யேமணி
மன்று ளாடு மகிழ்வன நாதனே. (சஎ)

வேறு.

என்றுபல தோத்திரங்கள் வழிபாடு தவறும லியம்பி யாங்கே, நின்றுதொழு மலவன்முனஞ் சிகதலிங்கத் தொளி சிறந்த நிமலன் தோன்றி, யன்றுமுநி யுரைத்தபடி நாற் கோடி மேல்நாலா யிரத்தி னோடு, நூன்றுமிரு நூறுண்டு நமைப்பூசை புரிந்துமிகத் துதிகள் செய்தாய். (சஅ)

ஆகலா னுளமகிழ்ந்து நீநினைத்த வரங்களெல்லா மளிப் பான், மிக்க, காதலா லிங்குவந்தே மென்றுமகிழ் வனத்தமர்ந்த கடவுள் கூறக், கோதிலா வருட்கடலே நின்பதத்தைப் பெறும்பேறு கொடுத்தி யென்னத், தீதிலாத் திருவுருவிற் கருணையுட னினிதைக்கியஞ் செய்து கொண்டார். (சகூ)

அவ்வலவ னடைந்ததனி யடையாளம் யாவருங்கண் டறிய லாகும், இவ்வுலகி லெஞ்ஞான்றுங் கற்கடகத் திங்க ளிற்சென் றெம்பி ரான்பால், செவ்விதிற்செய் பூசையொன் றக்ஷயமாகு மொருதரம்போய்த் தெரிசித் தோர்கள், வெவ்வினையாம் பிரமகத்தி முதலியகார் மதிபோல விடுபட் டுய்வார். (ருய)

அத்தருமச் சுதனரக்கன் வடிவாகிப் பின்புழையி லலவ னாகி, யித்தலத்திற் கானநிர்த்த சங்கரரைப் பூசைபுரிந் திலிங் கத் தூடும், பத்திமிகுந் தேயபிக்ப மானகதை யுரைத்தன மப் பால நேகஞ், சத்தியொடு மாலால சுந்தரிபூ சனைபுரிந்த தகைமை சொல்வாம். (ருக)

அலவன் பூசைச் சருக்கம் முற்றும்.

---

## 11-ஆவது ஆலால சுந்தரி பூசைச் சருக்கம்.

இந்திரனு தியர்போற்ற எங்கள்மகிழ் வனத்தீசன்
அந்தமிலா வுவகையுட னுகந்த நடம்புரியுஞ்
சுந்தரத்தை யெந்நாளுந் தொழுதுகாண் பான்கருதி
மந்திரசத் திகள்சூழ வடகயிலை வரைநீங்கி. (க)

வெள்ளெயிற்று முழைப்பகுவாய் வெம்மடங்கல் மிசை யேறிக், கள்ளுயிர்க்கு நறுந்தொடையல் கமழுந்தோ ளெட்டி

லங்க, அள்ளிலேச்சூ லங்கணிச்சி யதிர்துடிவாள் பரிசைகதை, பொள்ளொளிக்கார் முகம்பகழி யுரகவளை கரத்தேந்தி. (உ)

பூதகணக் கடல்போற்ற புரிசடைக்கா டழகெறிப்பச், சீதமதிக் கொழுந்தொருபாற் றெள்ளமுதக் கதிர்விரிப்ப, வேதமணிச் சிலம்பலம்ப மேகலைக்கிண் கிணிமுரல, மாதவ சத்திகள்கோடி சூழ்வரவை யகத்தில்வந்தாள். (௩)

கேதாரங் காசிமுதற் கிளர்தலங்கள் சென்றிறைவன்
பாதார விந்தமுதற் பத்தியினுற் சேவைசெய்து
மாதார கப்பிரம மந்திரத்திற் பொருளுணர்ந்தோர்க்
காதார மானவகு ளாரணியந் தனிலணைந்தே. (௪)

சாற்றரிய தடங்கடலி னகடுதனைக் கிழித்தோடி
யேற்றுளைந்து சங்கீன்ற இனவளைகள் கொழித்தெறிந்து
தோற்றுநெடுஞ் செம்பவளக் காடலைத்துத் துளியெறிநீ
ராற்றினுயர் காவிரிவா யானந்தப் புனலாடி. (௫)

அடர்பரியி னிரைபோல அதிருநெடுந் திரையெறிந்து, குடவளைவெண் மணியுதிர்த்துக் குளிர்மதிபோல் நிலவெறிப் பப், படர்சடைவண் டினங்குடைந்து படர்ந்தறுகால் மிதிற் றரற்ற, மடலவிழுஞ் செங்கழுநீர் வாவியினு மினிதாடி. (௬)

குடம்புரையுஞ் சங்கமொரு கோடியரு கோடியுக, ளிடங்கொணெடுங் கரைமீதி லெழுந்துபலாக் கனியுதிர, முடங்கறுகால் குடைந்தாறு முளரிமலர்ப் போதினெடுந், தடங்கழுநீர் முகைவிரியுஞ் சந்திரவா வியினுடி. (௭)

மடவனஞ்செங் கால்மிதிப்ப வள்ளுகிரால் மடல்கிழிந்து, படியுநெடுந் திரைப்புனலிற் பச்சிளந்தா மரைவிரிய, இடை யிடைபைங் காவியின்மே லெடுத்தெறிசெந் தேன்பெருகிக், கமகமமென் சூரியபுட் கரணியினு மினிதாடி. (௮)

ஓங்கியதன் போர்விளங்க வுத்தமமா முத்தரமேற்
காங்கிலகி மேன்மைதரு மநந்தீர்த்த மொன்றமைத்துத்
தீங்கறவே யதின்மூழ்கிச் செங்கனிவாய் மங்கைபங்கில்
நீங்கரிய மகாலிங்க நிலைமைபெறப் பூசித்தே. (கூ)

வானளவு முயர்ந்துதிசை யரப்பெல்லாஞ் சினைவீசிக்
கானநறு மலர்தூவிக் கமழ்ந்திலகு மகிழ்வனத்தில்
ஆனனமோ ரைந்துடைய அண்ணல்தமை யுளத்திருத்தி
ஞானமுறை தவறாமல் நண்புடனே வழிப்பட்டு. (ய)

செங்கழுநீர் நறுமலருஞ் சிறந்தகிளை மூன்றுடைய
மங்களவில் வத்தளமு மகிழுவனச் செழும்போதும்
கொங்குவிரி பங்கயமுங் குளிர்கொன்றைப் பொன்மலரும்
அங்கையினாற் கானநிர்த்த சங்கரரை யருச்சித்தே. (கக)

பன்முறையாஞ் சோடசமா முபசாரம் பரிமாறித்
தொன்முறைசை வாகமத்தின் சொன்னநெறி வழுவாமல்
நன்மறையா லுபநிடத மந்திரத்தால் நாவார
வின்மறைநன் னுதற்காளி தோத்திரங்கள் மிகச்செய்தாள். ()

அந்நிலைபின் மகிழுவனத் தமர்ந்தருளு மெம்பெருமான்
மின்னிலகுங் கொடிமருங்குல் மிக்கஅதி காந்தியுடன்
பொன்னிலகு மால்விடைமேற் போந்தருளி நமைத்துதித்த
நன்னிலைமை யுகந்தனம்யாம் நல்குவரம் பெறுதியென்றே. ()

சீருலவுந் தாமரைப்பூந் திருத்தவிசின் வீற்றிருந்த
காருலவு கருங்கூந்தல் வெண்முரற் செங்கனிவாய்
ஏருலவு பாமடந்தை மணிநாவி லினிதிருப்பப்
பேருலகெ லாம்படைக்கும் பிரமதண்ட மொருகோடி. (கச)

அலையெடுத்த பாற்கடலி னறிதுயிலோ டமர்ந்தபின்னர்,
கொலையெடுத்த இலங்கையர்கோன் கொடுமுடிக்கே யிலக்கா

கச், சிலையெடுத்தே வாளிதொட்டுச் செழுங்கிளி பின்ன
டந்து, மலையெடுத்த நெடுமாலின் வலியதண்ட மொருகோடி.

திலகவா ணுதற்பவளச் செய்யவாய் மையெழுதி
யிலகுகார் முகிற்கிணையா யிருண்டமலர்க் கருங்கூந்தற்
கலகவாள் விழிப்புளகக் களபமுலைப் பாகனென
வுலகெலா மெடுத்தேத்து முருத்ரதண்டம் ஒருகோடி. (கசு)

மறந்திகழுஞ் சுடர்ப்படைவாள் வடித்தகதிர் நெட்டிலைவேல்
நிறந்திகழ்கார் முகம்பரிசை நெடுந்திகிரி யடுங்குந்தம்
பிறங்கியமுத் தலைச்சூலம் பெருமுசலம் வெங்கணிச்சி
சிறந்தபல வத்திரங்கள் தேவதண்ட மொருகோடி. (கஎ)

ஞாயிறுதிங் கட்செவ்வாய் நலந்திகழும் புந்தியொடு
மேயவியா ழஞ்சிறந்த வெள்ளிகரி யோன்மிகவுந்
தியவிரா குக்கேது சேர்ந்தநவக் கிரகங்க
ளாயபல தண்டங்க ளனைத்தினையுந் தவிர்த்தியென. (கஅ)

வேண்டுவரம் பலகொடுத்து விளங்குபுகழ் நீரைப்
பூண்டருங்காப் பென்றூரும் புரிதியெனக் கற்பித்து
நீண்டசடை முடிக்கடவு ளிறைந்திருப்ப வெப்போதும்
கூண்டகணத் துடன்காளி யத்தலத்திற் குடிகொண்டாள். ()

என்றுபெருந் தவச்சூத னியம்புதலு முளமகிழ்ந்து
நன்றிதென முனிவரெலாங் காவிரிநன் னாடாளும்
வென்றிதரு மொருசெங்கோல் விறற்சோழன் காதையெலாம்
ஒன்றியபே ருவகையொடு முரைத்தியென வுரைத்திடுவான்.

ஆலால சுந்தரி பூசைச் சருக்கம் முற்றும்.

# 12-ஆவது செம்பியன் பூசைச் சருக்கம்.

தழையு நீள்சினை மகிழ்வன நாதர் பொற் றுளைக்
கழைய டார்ந்தமால் யானையான் வளவர்கோன் கருதிக்
குழையு மன்புள பூசைகண் டருள்வரங் கொடுப்ப
மழைபொ ழிந்தவை முநிவர்காள் வழுத்துவன் மன்னோ. ()

தடங்கொ ணீண்முடி சிறந்திடு சையமால் வரையி
னிடங்கொள் மாமக வெனத்துதித் தெழுந்துவாய் வெள்ள
மடங்கி டாதுபல் வரைகளை யகடுற வகழ்ந்து
மடங்க லோடுகை நாகமும் புரண்டிட வருமால். (உ)

இலங்கு பூமகள் சிறப்புற மார்பிடத் தணிந்த
அலங்க லாமெனப் பொலிவுறு மழகொடு பொருந்தித்
துலங்கு நீள்கரை யிருபுறந் தழைத்திடத் தோன்றி
நலங்கொள் நீள்கட லகடுற நண்ணிய தன்றே. (௩)

பனிவ ரைக்கணின் சந்தகில் பலபல வரன்றி
நனிமி குத்திடு வளமெலாம் நகையொடு கவர்ந்து
துனிவ கற்றிய முநிவரர் யாவருந் துதிப்பப்
புனித நீடுறத் துலங்கிடும் பொன்னிமா நதியே. (௪)

சொன்ன நன்னவ நவமணி துலங்கிடக் கொழித்து
மன்னு நீள்புன லெறிதிரை வளமொடு பரந்து
தென்ன லைப்பிரி வாமென இருகரை சிறக்கப்
பன்னு காலொடு நதிகளும் பலபல பயக்கும். (௫)

மன்னு வெண்டிரை வரிவளை நன்மணி கொழித்துத்
துன்னு வாலுக நிகர்த்திட இருகரை தொகுக்கு
மன்னை யாமென மன்னுயிர்க் கமுதளித் தருளும்
பொன்னி மாநதிப் பெருமையை யாவரே புகல்வார்? (௬)

இந்த மாநதிப் புனல்பரந் திருகரைப் பரப்புப்
பந்த மார்பணைச் சாலியிற் பாய்ந்திடப் படர்வா
னுந்து கன்னலைப் பொருதிட வோங்குநற் கதிர்கள்
புந்தி தேர்வுறு மாந்தரிற் பொலிவுற வணங்கும். (எ)

கரும்பு நீடிய கழனிகெனப் பொலிந்துகா வென்ன
விரும்பு சீரொடு நலங்கிளர் சிறப்பொடு மேவி
யரும்பு வாய்விரிந் தலர்ந்திட விளரிக ளனந்தஞ்
சுரும்பு பாடிய பொழில்வளர் சோழநன் னாடு. (அ)

மலமெ லாமொழித் துயர்கதி வண்மையை நாடு
பலமெ லாமருள் கண்ணுதற் பரம்பொருள் பரிந்த
தலமெ லாஞ்சிறந் தடியவர் தனித்தனி போற்று
நலமெ லாங்குடி யிருந்தது சோழநன் னாடு. (கூ)

காவி டத்தினில் வான்முகில் தவழ்ந்துகண் துஞ்ச
மேவு நீள்கடல் சுற்றிய வேலியாய் விரிந்து
தாவு தற்கரி தாயிடஞ் சாலவே தழைக்கும்
பூவி டத்தினிற் சிறந்தது பொன்னிநன் னாடு. (ய)

அரிய சூட்டராப் பணமுடி யாயிரஞ் சுமக்க
விரியு நீள்புவி மாதுதன் முகமென விளங்கிப்
பெரிய வானவ ருலகெனப் பெருகிய செல்வம்
புரியு நீணகர் பலவுள பொன்னி நன் னாடு. (கக)

வேறு.

அன்ன நாட்டுக்க ணிகல மாகவே
பொன்னி னீண்மதிள் சூழ்ந்துபொ லிந்திடுந்
தென்னு றந்தைத்தி ருநகர் மேவிய
மன்னர் மன்னன்வ ளவர்பி ரானரோ. (கஉ)

கிளரு நீதிக் கிரேதயு கத்தினில்
வளர்பெ ரும்புவி யாவும்வ ளம்பெற

தளர்வி லாறுத னித்தொரு கோல்செல
அளவில் கால மரசு புரிந்தனன். (௧௩)

ஆறி லொன்று கடமைய தாகவும்
வீறு நான்மறை யோர்கள் விளங்கவும்
ஊறு நீக்கி யொருகுடை நீழலிற்
றேறு நன்மனு நீதிசெ லுத்தினன். (௧௪)

தெரியு நான்மறை செப்பும்வி திமுறை
வருண நான்கும்வ ரம்பிக வாறதம்
உரிமை செய்ய எண் ணான்கற மோங்கிடச்
சுரபி யுங்குடப் பால்கள்சொ ரிந்திட. (௧௫)

நீடு செல்வம்நி றைந்திட நீதியாற்
பீடு சாலும்பெ ரும்படை நான்கொடுந்
தேடு நான்கரண் சேர்த்துப் பகைசெகுத்
தாடல் கொண்டர சாளும் பருவத்தில். (௧௬)

வகைசொல் கோள்பல வக்கிர மாதலால்
மிகவு நீள்மழை மேகம்வ றந்திடப்
பகர்ப சும்பயிர் பல்லுயிர் வாடுற
அகமெ லிந்தன ரம்புவி யோரெலாம். (௧௭)

ஓது நீதியு றந்தையர் காவலன்
பாது காத்தப ரிசிது நன்றென
மாது பாகர்ம கிழ்ந்தப தியெலாஞ்
சீத மாயபி ஷேகங்கள் செய்தனன். (௧௮,

வேறு.

குலவிரத மாதவர்கு ணக்கணமு கந்தோர்
குலவிரத மாதவர்கு ணக்கணமு கந்தோர்

நிலவினைய கற்றுமதி நேரியன கத்தார்
நிலவினைய கற்றுமதி நேரியன கத்தார். (௧௯)

நற்கடக போலகண நாயகனை யின்றோர்
பொற்கடக மாகமுது போரரவ ணிந்தோர்
சொற்கடக மூவர் புகழ் தொன்மகிழ்ம னேசர்
கற்கடக மெய்யொடுகை லப்பவருள் செய்தோர். (உ0)

## வே று.

வான ளக்கும கிழ்வன நாயகர்
கான நிர்த்தன சங்கரர் காந்திசேர்
பானு வுக்கருள் கூரும்ப ராபரர்
ஞான வித்தகர் தம்பதி நண்ணியே. (உ௧)

மன்னு பூசைவ ழாமல்வி திமுறை
யுன்னு மன்பினு டன்புரிந் தேத்திப்பின்
என்னை யாளும்இ றைவனென் றேசெழும்
பொன்னி நாடன்பு கழ்ந்தடி போற்றியே. (உ௨)

அண்ண லேயெனை யாளுங்க டவுளே
விண்ணின் மாரிவ றந்திட வேலைசூழ்
மண்ணி லாருயிர் வாடிவ ருந்தலால்
எண்ணி யெண்ணியி டைந்தென் னுள்ளமே. (உ௩)

உன்னை யன்றியு றுதுணை வேறிலேன்
மின்னு மாமழை வேண்டும்பு விக்கெனப்
பொன்னி நாடன்பு கன்றிட வாங்கனம்
என்னை யாளுடை யீசனி யம்புவான். (உ௪)

வளவ நின்பெரும் பூசைம கிழ்ந்தனம்
அளவை பன்னிரண் டாயிர மம்பொனேர்

கிளரு மத்தொகை நெற்கலன் கேண்மையாய்
விளையு நன்னில மின்றாவி டுத்தியேல். (உரு)

நீயு ரைத்தப டிக்குநன் னீர்மழை
மாயி ரும்புவி யெங்கணும் வாழவே
தூய மேகஞ்சு ரந்துநி ரந்தரம்
ஓய்வி லாதுபொ ழியவு தவுவோம். (உசா)

என்றெ மீசனி யம்பிய வாய்மையை
நன்றி தாமென நன்கொடைச் செம்பியன்
ஒன்று பஞ்னிரண் டாயிர மொண்பொனொற்
குன்றி டாவிளை பூமிகொ டுத்தனன். (உஎ)

அந்த வேலைய ரனரு ளாற்றிரை
முந்து வேலைமு கந்தெழு மேகங்கள்
சிந்து நன்மழை பூமிசெ ழித்திடச்
சந்த தம்பெருந் தாரைசொ ரிந்தவே. (உஅ)

நாறு கொன்றைம கிழ்வன நாதனை
யேறு கைத்தஇ றைவனை வாழ்த்தியே
கூறு தோத்திரஞ் செய்தங்கை கூப்பியே
தேறு மன்பொடு தன்பதி சேர்ந்தனன். (உகூ)

சேர்ந்த செம்பியன் பூசனை செய்ததும்
வார்ந்த மேகங்கள் வான்மழை பெய்ததும்
ஓர்ந்து ரைத்தனம் ஓங்குபுன் கூரன்பு
சார்ந்த வீசன்ச ரிதையி யம்புவாம். (௩௰)

செம்பியன் பூசைச்சருக்கம் முற்றும்.

## 13-ஆவது திருப்புன்கூர்ச் சருக்கம்.

பாரிடைச் சிறந்து வானவர் தருவின் பண்புடை வள மெலாந் திரண்டு, சீர்பெறப் பொலிந்து மூவிரு பருவஞ் செழுமல ரிடைவிடா தலர்த்தி, யேர்பெற நிவந்து திசையெ லாம்படர்ந்தங் கிரவிபொற் றேரிடை மறுக்க, கார்தவழ் சினை யின் மகிழ்வனத் தமர்ந்த கண்ணுதற் கடவுடன் னருளால். ()

செஞ்சுடர்ப் பரிதி கதிர்விரித் தனைய திகழொளி பரப் பிய செவ்வே, லஞ்சலர்க் கிடியே றனவரு செங்கோ லபய னிம்மாநிலம் புரந்து, மஞ்சென வழங்குங் கரதலச் சோழன் மனமகிழ் வுறும்படி மாரி, யெஞ்சலில் பலநா ளிடைவிடா தலகி லிரவொடு பகலெல்லாஞ் சொரிய. (௨)

பூவுல கிடத்து மானிடர் முனிவர் பொன்னகர்க் கிறை வனே முதலாய், மேவிரு நான்கு திசையுடைத் தலைவர் விண் ணவர் யாவரும் வெருவிக், காவொடு சிறந்த மகிழ்வன நீடூர்க் கறைமிடற் றண்ணல்முன் போந்து, நாவினிற் றுதிசெய் தமலனே நம்பா லருள்புரி வாயென நவின்றே. (௩)

படிமுழு தாளும் வளவர்கோன் பூசை பரிந்துநீ யளித் தருள் மாரிக், கொடியகார் மேகம் விண்ணெலாம் பரந்து குரை கடல் நீரெலாம் பருகி, பிடிமுழக் கெறிந்து கதிரொளி மறைய எண்டிசை யிருள்படப் பொதிந்து, நெடியவில் வளைத்துத் தழலென மின்னிப் பொழிந்தன நீணில மெங்கும். (௪)

பொழிந்திடு மழைநீர் பகலிரா வென்று புகன்றிட மயக்கியந் நீரின், அழிந்தது பூவின் மறையவர் செய்பு மறு தொழிலாருயி ரநேகம், ஒழிந்தன இனிமே லரைக்கணந் தாழி லுய்கிலே மென்னதயே யதனால், மொழிந்தன மெய்க்குன் பத மலரல்லால் முறையிடற் கிடம்பிறி திலையே. (௫)

இந்த வேளையினி யிரங்கிலே யென்னி லிவ்வுல கனைத்தையும் வேதன், முந்தைநாட் போலப் படைத்திட வேண்டும் முதல்வனே மூலகா ரணனே, புந்தியாய் ஞானப் பொருளுமா யைந்து பூதமாய் நாதமாய் நாத, விந்துவா யுயிருக் குயிருமாய் நிறைந்த விமலனே தேவர்நா யகனே. (௫)

அரியநற் றவத்தி னுயர்மிரு கண்டுக் கரும்பெறற் குழவியதாகி, யுரியமெய்ப் பொருளுன் மறையவர் கருத்துளுணர்ந்தமார்க் கண்டனுக் கிரங்கிக், கரியநெட் டிருளின் பிழம்பெனு நிறத்த கவையடிப் பகடுகைத் தெழுந்த, எரியனற் சுழல்கட் காலனை யிட்டு மிறைவனே தெய்வநாயகனே.

மறிந்தலை யெறிந்து வளைமணி கொழித்த வாரிதி நாப்பணிற் பிறந்து, செறிந்தபல் லுயிரும் வானமு மண்ணுந் திசைகளு மசைவில்பா தலமும், கறங்கெனச் சுழன்று நிலைதடு மாறக் கடையுகத் தந்தக னென்ன, அறங்கெடத் தொடர்ந்த ஆலகா லத்தை யமுதென நுகர்ந்த காரணனே. ()

போர்வலி மிகுத்த சூரனே முதலாம் புழைக்கைமா வாரண முகத்த, தாருகன் தலையோ ராயிர முடைய தழல்விழிச் சிங்கமா முகத்தன், வேரறக் குன்றந் துகள்பட வேலை வெளிபட வெற்றிவே லெறிந்து, கார்மயி லூர்ந்த கந்தனைப் பயந்த கடவுளே கருணைவா ரிதியே. (௯)

என்றடி தொழுவோர் தம்முக நோக்கி யிரங்கிய மகிழ்வனத் தெந்தை, கன்றினுக் குருகு மாவெனச் சுரந்த கருணையங் கடைமடை திறந்து, துன்றிய வன்பின் பரிவொடு முன்னந் தோன்றியே யஞ்சன்மி னென்னு, சென்றுநீர் திருப்புன்கூரினிற் சேர்ந்து திகழ்சிவ லோகரைப் பரவும். (௧௦)

பூம்பொரி சிதறித் திசையெலாங் கமழும் பொலன்சினை விண்முக டளப்ப, வாம்பரி யேழு பூண்டபொற் றேரோன் வழிதடு மாறிட வளர்ந்து, மேம்படுகாஞ்சா ரணியமென்பது யாம் விரும்புறு பதிக்கெலா மிக்க, தாம்பதியதனில் வளர்சிவ லோக நாதரா யமைந்தருள் செய்வோம். (கக)

அத்திருத் தலத்தி லேகுமின் என்று மகிழ்வனத் தமர்ந்து வீற் றிருந்த, பைத்தசூட் டரவ கங்கண மணிந்த பங்கயச் செங்கையெம் பெருமான், சித்தமொத் தியம்பத் தேவர்கள் முநிவர் திசையுளோர் யாவருந் திரண்டு, கொத்தலர் திருப் புன் கூரிலே கித்தங் குறையெலா முறையிடத் தொடங்கி.()

வேதனே திருமா லயன்முத லறியா விமலனே மன்று ளா டியபொற், பாதனே வெள்ளிப் பொருப்பில்வீற் றிருக் கும் பரமனே பால லோசனனே, போதனே மழுமான் றிருக் கரத் தேந்தும் புநிதனே பசுபதியான, நாதனே திருப்புன் கூர்ச் சிவ லோக நம்பனே சரணெனப் பணிந்தார். (கங)

வே று.

பணிந்திடு மடியவர் முன்னம் பானிலா
வணிந்திடு சடைமுடி யண்ணல் தோன்றியே
துணிந்திடு மன்பினீர் சொரியு மிம்மழை
தணிந்திடு மாறினிச் சாற்றக் கேண்மினே. (கச)

பன்னிரண் டாயிரம் பசும்பொ னத்தொகை
துன்னிய நற்கலந் துலங்கு நெல்வினை
நன்னில மகிழ்வன நாதர்க் கீந்தபோல்
மன்னிய வெமக்குநீர் வழங்கு வீரெனில். (கரு)

கோரமா மழைதனைக் குறைத்து வேலைசூழ்
பாரினில் விளங்கிய பருவந் தோறுமே

சீருறு சராசரஞ் செழிக்க வென்றானன்
மாரிபெய் திடவரம் வழங்கு வோமென்றார். (கசு)

அவ்வுரை கேட்டலு மகம கிழ்ந்தவர்
செவ்வுரைச் செம்பியன் திருமுன் செப்பியே
யிவ்வகை நன்னில மியல்பின் வாங்கியே
நவ்விசேர் கரத்தினார்க் கன்பி னல்கினார். (கஎ)

அக்கண மடர்மழை யல்லல் தீர்ந்திட
முக்கண னருள்செய்து திங்கள் மும்மழை
யிக்கடற் புவியெலா மென்றும் பெய்யவே
மக்களுந் தேவரு மகிழ்ச்சி யெய்தியே. (கஅ)

ஓங்குபுன் கூர்ச்சிவ லோக நாதனைத்
தேங்கிய காதலிற் சிந்தை செய்துசீர்
தூங்குமெண் ணான்கறந் தொலைவி லாவகை
பாங்குடன் புரிந்துதம் பதியி னண்ணினார். (கக)

இவ்வண மகிழ்வனத் தெந்தை யேர்பெற
நவ்விசேர் கரச்சிவ லோக நாதரா
யெவ்வமில் திருப்புன்கூ ரிடத்து நாடொறுஞ்
செவ்விதிற் பொருந்தியே சிறந்து வாழ்வரால். (உ0)

திருப்புன்கூர்ச் சருக்கம் முற்றும்.

---

## 14-ஆவது தீர்த்தச் சருக்கம்.

மருவிய திருப்புன் கூரை மகிழ்வனத் தெம்மா னன்பின்
விரவியெஞ் ஞான்று மேவி விளங்கிவீற் றிருந்த வாறுஞ்
சொரிமழைக் கோரந் தீர்த்து நன்மழை சுரந்து பெய்த
பரிசுமிங் குரைத்தேந் தீர்த்த மொன்பதும் பகர லுற்றாம்.

### வேறு.

மன்றல்நீ டூர்ப்பெரு வரைப்பு நாடிடி
லொன்றரை யோசனை யுள்ள தவ்வயின்
நன்றிசேர் திருப்புன்கூர் நாதர் தம்மையும்
என்றுநன் மகிழ்வனத் திறையென் றேத்துவார். (௨)

இப்பெருந் தலத்தினி லெய்து தீர்த்தங்கள்
அப்பகீ ரதியென அறையு நான்மறை
மெய்ப்பரம் பொருளென விளங்கு மத்திறஞ்
செப்புதற் கெளியதோ சேடற் காயினும். (௩)

வளங்கெழு மலர்ச்சினை மகிழ்வ னத்தினிற்
களங்கமில் கீழ்த்திசை கான தீர்த்தனர்
விளங்கிய தென்றிசை தேவ லிங்கமேற்
குளங்கனி காளியன் றுவந்த லிங்கமே. (௪)

உத்தர மேற்றிசை யுவந்து சூரியன்
மெய்த்தவப் பூசைகொ ளிலிங்க மேவுமால்
அத்தலத் திலிங்கத்தை யகில மேற்றெரி
சித்தவர் பவவினை தீர்ந்து வாழ்வரால். (௫)

மதிதவழ் சடைமுடி மகிழ்வ னப்பிரான்
அதிககாந் திபுடன மர்ந்து வாழ்வுறும்
பதிபெறுஞ் சினகரப் பரப்பின் கீழ்த்திசை
கதிதரு மிந்து புட்கரணி மன்னுமால். (௬)

மன்னிய சந்திர வாவி மூழ்கினோர்க்
கின்னலும் பவங்களு மீழை பாவமும்
வன்னியிற் றூறென மாய்ந்து போமெனப்
பொன்னவிர் சடைமுடிப் புநிதன் கூறினன். (௭)

தேங்கிய மலர்மகிழ் வனத்துத் தென்றிசைப்
பாங்கரி னிந்திர தீர்த்தம் பண்புடன்
ஓங்குமந் நீரிடை மூழ்கி னோர்பவம்
நீங்குவ ரைந்தரு நிழல் நீங்கிலார். (அ)

சார்ந்தவுத் தரதிசை தனக்கு மேற்கதாய்ச்
சேர்ந்திடு பத்திர காளி தீர்த்தமே
லார்ந்ததி லாடினோ ரல்லல் நோயற்றுக்
கூர்ந்துவாழ் வெய்துவர் குபேர னென்னவே. (கூ)

பரவிய மேற்றிசைப் பாங்கர் நீள்கதிர்
இரவிபுட் கரணியொன் றிலங்கு மாங்கதில்
விரவியே தோய்ந்திடில் விளங்கி டும்பரப்
பிரமரு பப்பெறும் பேறு நண்ணுவார். (௰)

மறைபுகழ் மகிழ்வனச் சுற்றும் வண்டிசை
நிறைதரு செங்கழு நீரி னோடைசூழ்ந்
துறையுமப் புனல்படிந் தோர்கள் கார்தவழ்
கறைமிடற் றண்ணல்வாழ் கயிலை சேர்வரால். (கக)

அசைவிலா இந்திர தீர்த்தத் தக்கினி
திசையினில் முனிவரர் தீர்த்தஞ் சேர்ந்ததி
லிசைபெறப் படிந்தவ ரின்ப மெய்தியே
விசையினி லிந்திர வியவஞ் சேர்வரால். (கஉ)

குளிர்தரு மகிழ்வனங் குலவு காவிரித்
தெளிபுன லாநந்த தீர்த்தந் தென்றிசை
கிளர்தரு மதன்பலன் கீர்த்தி யாவையும்
ஒளிதிகழ் பாரினி லுரைக்கற் பாலதோ. (கங)

நிருதிதன் மூலையி னிறைந்து நீரறுப்
பரிதிகுண் டத்தினிற் படிந்து ளோரெலாஞ்

சுருதிகள் காணொணுத் தொல்லை வானவன்
கருதுறு தண்பெருங் கயிலை சேர்வரால். (கச)

திருந்துமீ சானராந் தேவர் தன்றிசைப்
பொருந்துறு வருணன்மா தீர்த்தம் போந்ததிற்
பெருந்தவப் பேற்றிஞல் மூழ்கப் பெற்றவர்
வருந்திடா திந்திரன் வடிவ மெய்துவார். (கரு)

இப்பெருந் தீர்த்தங்க ளென்னு மொன்பதுஞ்
செப்பிடில் நினைத்திடிற் றெரிச னஞ்செயில்
ஒப்பிலாப் பரகதி யுறுவர் மூழ்கினோர்
மெய்ப்பலன் யாவரே விளம்பு வார்களே? (கசு)

வேறு.

பூமகட் கணியாய் மன்னும் பொன்னிதழ் பொலிந்த நீரோர்க்
காமரத் தொகுதி பாடுங் கடிகமழ் மகிழ்வனத்திற்
றேமரு கடுக்கை மாலைச் செஞ்சடைக் கடவுட்போற்றிப்
பாமரு கதைகள் யாவும் பரிவுடன் பகர்ந்தே னென்றான். ()

துலங்குமிக் கதையைக் கற்றோர் சொற்றவர் கேட்கப் பெற்றோர், இலங்கிய புத்த கத்தி லெழுதியே பூசித் தோர்கள், நலங்கெழு புவியில் வாழ்ந்து நான்குதிக் கொருகோலோச்சி, யலங்கல்சேர் கற்ப கத்தி னரசுவீற் றிருப்பர்மாதோ.

வாழிநான் மறையோர் தேவர் வாழிசெங் கோல்செய் மன்னர்
வாழியேழ் முகிற்கு ழாங்கள் வாழிமுற் சமய சைவம்
வாழிபுன் கூர்சேர் நாடு வாழிமெய்த் தலந்தா னீகர்
வாழிமுத் தமிழ்தேர் நீரோர் மகிழ்வன நாதர் வாழி. (கக)

தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

---

நாரணக்குடை சின்னவடமலைய பிள்ளைஐயன் அவர்கள் பாடின நீரோர்த்தலபுராணம் முற்றிற்று.

# முனையடுவார் நாயனார் புராணம்.

(பெரிய புராணம்.)

மாறு கடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திரு
டு, நாறு விரைப்பூஞ் சோலைகளி னனைவாய் திறந்து
ரழிசெழுந்தே, ஞறு பெருகி வெள்ளமிடு மள்ளல்
லின் மள்ளருழுஞ், சேறு நறுமா சங்கமுழும் செல்வ
ர் திருநீடூர். (௧)

விளங்கும் வளமைத் திருநீடூர் வேளாண் டலைமைக் குடி
தல்வர், களங்கொண் மிடற்றுக் கண்ணுதலார் கழலிற்
:றிந்த காதன்மிகு, முளங்கொ டிருத்தொண் டுரிமையினி
ள்ளார் நள்ளார் முனையெறிந்த, வளங்கொ டிறைவ
டயார்க்கு மாறு தளிக்கும் வாய்மையார். (௨)

மாற்றார்க் கமரி லழிந்துள்ளோர் வந்து தம்பான் மாநி
ப, மாற்றும் பரிசு பேசிறை லதனை நடுவு நிலைவைத்துக்,
ற்று மொதுங்கு மாள்வினையாற் கூலி யேற்றுச் சென்றெ
ந்து, போற்றும் வென்றி கொண்டிசைந்த பொன்னுங்
காண்டு மன்னுவார். (௩)

இன்ன வகையாற் பெற்றநிதி யெல்லா மீச னடியார்
ள், சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய
'பானகமும், கன்ன னறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளூறு
;த கலந்தளித்து, மன்னு மன்பி னெறிபிறழா வழித்தொண்
-ாற்றி வைகினர். (௪)

மற்றின்னிலைமை பன்னெடுநாள் வையம் நிகழச்செய்து வழி, யுற்ற வன்பின் செந்நெறியா லுமையாள் கணவன் திருவருளாற், பெற்ற சிவலோ கத்தமர்ந்து பிரியா வுரிமை மருவினார், முற்ற வுழந்த முனையடுவார் என்னு நாம முடையார். ([illegible])

## வசனம்.

"சோழநாட்டிலே, திருநீரிலே, வேளாளர் குலத்திலே, சிவனடியார்களிடத்தே மிகுந்த பத்தியுடைய ஒரு பெரியவரிருந்தார். அவர் சத்துருக்களுடைய போர்முனையிலே தோற்றவர்கள் தம்மிடத்தில்வந்து கூலிபேசினால், அவர்களுக்காகப்போய்ப் போர்செய்து வென்று, பொருள் சம்பாதித்து, சிவனடியார்களுக்குச் சொன்ன சொன்னபடியே நிரம்பக் கொடுத்து, அவர்களைத் திருவமுது செய்வித்துக் கொண்டிருந்தனர். அதனாலவருக்கு முனையடுவார்நாயனார் என்னுந் திருநாமம் உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் இவ்வருமையாகிய திருத்தொண்டைச்செய்து கொண்டிருந்து, சிவபதம் பெற்றார்."